விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 25
ஒலி 033 வள்ளுவர் ஆண்டு 2055 தை 07 ஞாயிற்றுக்கிழமை (21.01.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டமூலத்தை இலங்கை விலக்கிக் கொள்ள வேண்டும்
### சர்வதேச அமைப்புகள் கூட்டாக வேண்டுகோள்

(கொழும்பு)
இலங்கை அரசாங்கம் உத்தேச நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலத்தை விலக்கிக் கொள்ளவேண்டும் என பத்திரிகையாளர்களை பாதுகாப்பதற்கான குழு உட்பட ஐம்பதிற்கும் மேற்பட்ட சர்வதேச அமைப்புகள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளன.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் உத்தேச நிகழ்நிலை பாதுகாப்பு சட்ட மூலத்தை விலக்கிக் கொள்ள வேண்டும். அவர் பலவேறு தரப்பினருடன் தொடர்ச்சியான கலந்தாலோசனைகளை மேற்கொள்ள வேண்டும் என பத்திரிகையாளர்களை 19

## தமிழரசுக் கட்சியின் தலைமை தெரிவு இன்று

(திருகோணமலை)
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமையினைத் தெரிவு செய்யும் தேர்தல் இன்று ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையில் இடம் பெறவுள்ளது.

இதில் பாராளுமன்ற உறுப்பினர்களான சிறீதரன், சுமந்தின், யோகேஸ்வரன் ஆகியோர் போட்டியிடவுள்ளனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவ பதவிக்கு தேர்தல் இன்றி ஒருவரை 19

## தேர்தல் நெருங்கியுள்ள நிலையில்
# கட்சித் தாவல்களுக்கான பேரம் பேசல் ஆரம்பம்
### கோடிக்கணக்கான பணம் கைமாறலாம்
### கொழும்பு அரசியலில் பரபரப்பு

(கொழும்பு)
ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் நெருங்கியுள்ள நிலையில் கட்சித் தாவல்களுக்கான பேரம் பேசல் ஆரம்பமாகியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

*(19ஆம் பக்கம் பார்க்க)*

## வவுனியாவில் சடலம் மீட்பு

(வவுனியா)
வவுனியா - திருகோணமலை பிரதான வீதியில் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

வவுனியா, திருகோணமலை பிரதான வீதியின் வவுனியா எல்லைப்புறமாக ஹெப்பற்றிப்கொல்லாவ பகுதியிலேயே இச்சடலம் நேற்று கண்டெடுக் 19

## கிளிநொச்சியில் இளைஞனின் சடலம் மீட்பு

(கிளிநொச்சி)
கிளிநொச்சி பன்னங்கண்டி பகுதியில் இளைஞன் ஒருவரின் சடலம் நேற்று சனிக்கிழமை மீட்கப்பட்டுள்ளது.


கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பன்னங்கண்டி 19

## மின்சாரம் தாக்கியதில் இளைஞன் உயிரிழப்பு
### வரணியில் சம்பவம்

(சாவகச்சேரி)
கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வரணி - இயற்றாலைப் பகுதியில் மின்சாரம் தாக்கி 34 வயதான இளைஞன் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

மேற்படி இளைஞன் தனது வீட்டில் மின் திருத்த வேலையில் ஈடுபட்டிருந்தபோது மின்சாரம் தாக்கியதாக தெரிவிக்கப்படுகிறது. 19

## நிறைவேற்று அதிகாரத்தை நீக்கினால் ரணிலுக்கு ஆதரவு
### ராஜித சேனாரத்ன தெரிவிப்பு



(கொழும்பு)
நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ரணில் நீக்கினால் நிபந்தனையின்றி ஆதரவு வழங்க தயாராக இருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். 19

## ஜனாதிபதித் தேர்தலுக்கு ரூ.1000 கோடி செலவாகும்
### தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)
எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கு சுமார் ஆயிரம் கோடி ரூபாய் வரை செலவாகும் என தற்போது மதிப்பிட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதற்கு தேவையான நிதி 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்திலும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நடைமுறையில் உள்ள அரசியல 19

## பசிலை பிரதமராக்க திட்டம்?

(கொழும்பு)
பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் நிதியமைச்சருமான பசில் ராஜபக்ஷவை பிரதமராக நியமிக்க ஸ்ரீ லங்கா 19

## விளையாடிய சிறுவனுக்கு எமனாகிய ஊஞ்சல் கயிறு
### முல்லையில் சோகம்

(முல்லைத்தீவு)
ஊஞ்சல் ஆடிக் கொண்டிருந்த 10 வயது சிறுவன் ஒருவன் ஊஞ்சல் கயிறு கழுத்தை இறுக்கியதில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

நேற்று மாலை 4.30 மணியளவில் முல்லைத்தீவு செம்மலைப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த பிரசாத் தனேஷ் (வயது-10) என்ற இளைஞனே உயிரிழந்த 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லங்கா மஹால்(PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை



லண்டன் - 925/=
பிரான்ஸ் - 1900/=
ஜேர்மனி - 1700/=
கனடா - 2290/=
அவுஸ்திரேலியா - 2450/=
சுவிஸ் - 2050/=
இந்தியா - 990/=

இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை. (18708)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புக்களுக்கு :
**0091956615671 9**

WESTERN UNION, MoneyGram, Ria MONEY TRANSFER ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

40,கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
**077 8393 974**



## வேலைவாய்ப்பு

Romania நாட்டில் Delivery Boy மற்றும் தொழிற்சாலை வேலைவாய்ப்புகள் உள்ளன.
கனடாவிற்குமான Tourist விசா தேவைப்படுபவர்கள் தொடர்பு கொள்ளுங்கள். (C-8173)

**Hybrid International Hub(pvt)ltd Jaffna**
(வேம்படி மகளீர் கல்லூரி அருகில்)
**021 222 1265, 076 250 0098**



## காணி விற்பனைக்கு

நிலப்பரப்பு
யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியில் பருத்தித்துறை வீதி பிரதான முகப்புடன் அமைந்துள்ள 4 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு. (18686)

**077 077 4919**


# நல்லெண்ண அடிப்படையில் 40 இந்திய மீனவர்களை விடுவிக்க தீர்மானம்

வடக்குக் கடற்பரப்பில் அண்மையில் கைது செய்யப்பட்ட 40 இந்திய மீனவர்களையும் விடுவிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நல்லெண்ண அடிப்படையில் அவர்கள் விடுவிக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதற்கமைய, நீதிமன்ற நடவடிக்கைகளின் பின்னர் குறித்த 40 இந்திய மீனவர்களும் விடுவிக்கப்படுவார்கள் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதனடிப்படையில், மன்னாரில் கைது செய்யப்பட்ட 18 மீனவர்களும் பருத்தித்துறையில் கைது செய்யப்பட்ட 10 மீனவர்களும் ஊர்காவற்றுறையில் கைது செய்யப்பட்ட 12 மீனவர்களும் விடுவிக்கப்படவுள்ளனர். (ம-7)


## அயோத்தியில் இராம பிரான்



தை 8, திங்கள் காலை 1000 மணி (22.01.2024)

மும்மை சால் உலகுக்கு எல்லாம் மூல மந்திரத்தை, முற்றும் தம்மையே தமர்க்கு நல்கும் தனிப் பெரும் பதத்தை, தானே இம்மையே எழுமை நோய்க்கும் மருந்தினை, 'இராமன்' என்னும் செம்மை சேர் நாமம் தன்னைக் கண்களின் தெரியக் கண்டான்.

**இலங்கை யாழ்ப்பாணம் பொன்னாலை இராமர் கால்பதித்த திருவடி நிலை அருகே அருள்மிகு வரதராசப் பெருமாள் கோயில் சிறப்பு வழிபாடு**

**அனைவரும் வருக**

தை 8, திங்கள் காலை 1000 மணி (22.01.2024)

அழைப்பாளர்: சிவ சேனை (18697)



Government TVEC Approved



தாதியர் பயிற்சிப்பாடசாலை
FLORENCE NIGHHTINGAL

## தாதியப்பயிற்சி நெறி -2024

**நுழைவுத்தகமை**

- க.பொ.த.சாதாரண தரம் குறைந்தது 5 பாடங்கள் சித்தி பெற்றிருத்தல்
- விண்ணப்பதாரி 16 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல்
- பயிற்சிகால எல்லை 1 வருடம் (பகுதி நேரம்)
- பயிற்சி முடிவில் அரச அங்கிகாரம் பெற்ற சான்றிதழ்
- தனியார் வைத்தியசாலையில் நிரந்தர வேலைவாய்ப்புக்கள்

**கற்கை நிலையங்கள்**

- மருதனார்மடம்
- நெல்லியடி
- சாவகச்சேரி

விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கங்கள்

VIBER 0777186438
WHATS APP 0774824473
T.P.NO 0777186438

நிர்வாகம்
புளோரன்ஸ் நைற்றிங்கேல் தாதியர் பயிற்சிப்பாடசாலை (18701)


## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 15 - 12 - 1940 | 18 - 01 - 2024 |

## திருமதி சரோஜினிதேவி குணசிங்கம்

யாழ்ப்பாணம் கரவெட்டி மத்தியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சரோஜினிதேவி குணசிங்கம் (வீரபத்திரர் கோவில் தேவி) அவர்கள் 18.01.2024 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் எழுதுமட்டுவாள் வே.சங்கரப்பிள்ளை, கரவெட்டி மத்தி செல்லாச்சி தம்பதிகளின் ஏக புதல்வியும் காலஞ்சென்ற வே.குணசிங்கம் (ஓய்வுபெற்ற விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும் ஜெயந்தன் (அவுஸ்திரேலியா), மிகுந்தன் (சிரேஷ்ட விவசாய உயிரியல் பேராசிரியர்), துஷ்யந்தன் (அவுஸ்திரேலியா), சுகந்தன் (கனடா) மற்றும் குமுதினியின் அன்புத் தாயாரும் ராதா, துஷ்யந்தி (விவசாய பொறியியல் பேராசிரியர்), கவிதா, மஞ்சுளா, இ.ரகுநாதன் (யாழ்.மாவட்ட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சிந்துஜா, ஷேகன், சோபனா, கிஷாந், வைத்தியர் மிதுறிகா திவாகரன், பொறியியலாளர் துமிலன் மாதங்கி, வக்ஷலன் (மருத்துவபீடம், கொழும்பு பல்கலைக்கழகம்), விதுஷா, கீரன், வித்தகி கௌதம், லஷானி, மிதுஷா, அகரன் ஆகியோரின் பேர்த்தியும் எல்றோய் ஷேகனின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (21.01.2024) ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சோனப்பு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

வீரபத்திரர் கோவிலடி,
கரவெட்டி மத்தி, கரவெட்டி.

தகவல் :
குடும்பத்தினர்

(ஏ-30)


## இணுவில் கந்தசுவாமி கோயில்

தைப்பூச உலகப் பெருமஞ்சத் திருவிழா
**பால்குடப் பவனி**



**காலம் : 25.01.2024 வியாழக்கிழமை**

நேரம் : காலை 6 மணிக்கு பால்குடப் பவனி இணுவில் மருதனார் மடம் பல்லப்பை வைரவர் ஆலயத்திலிருந்து ஆரம்பம்

குறிப்பு :

- பால், குடம் என்பன ஆலயத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (வீட்டிலிருந்து எந்தப் பொருட்களும் கொண்டு வரத் தேவையில்லை)
- சென்றவருடம் போல் நேர்த்தி செய்வதற்கு யாழ்.குடாநாட்டின் பல பாகங்களிலும் இருந்து பெருந்தொகையான பக்தர்கள் பால்குடத்தில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்ப்பதனால்

**முற்பதிவுகளை 23.01.2024 செவ்வாய்க்கிழமைக்கு** முன்பு ஆலய கருமபீடத்தில் மாலை 4-6 மணி வரை மேற்கொள்ளலாம்.

**பால்குடப் பற்றுச்சீட்டு 400/=**

- வருடத்தில் ஒருதடவை சண்முகப்பெருமானுக்கு முருக பக்தர்கள் எல்லோரும் கூடி எடுக்கும் பால்குடப் பவனியில் நாம் எல்லோரும் கலந்து சண்முகப்பெருமானுக்கு பால் அபிஷேகம் செய்திடுவோம் வாரீர்...

விளம்பர அனுசரணை **மதுசாலினி கிரண்டிங் மில் உடுவில் கிழக்கு, இணுவில்.** (C-8174)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் வரிச்சுமை மேலும் அதிகரிக்கும்

## சர்வதேச நாணய நிதியம் எச்சரிக்கை

(கொழும்பு)

**எதிர்வரும் 2025 ஆம் ஆண்டில் புதிதாக சொத்து வரி அறவீடு செய்யப்பட உள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை விவகாரங்களுக்கான பிரதிநிதிகள் குழுவின் பிரதானி பீட்டர் புருவர் தெரிவித்துள்ளார்.**

மேலும், சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் ஏற்படுத்திக்கொண்டுள்ள இணக்கப்பாட்டின் அடிப்படையில் இவ்வாறு வரி அறவீடு செய்யப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வரியின் ஊடாக சொத்து உரிமையாளர்கள் மீது வரி அறவீடு செய்ய முடியும். கடந்த 2022 ஆம் ஆண்டில் நாட்டின் வரிவருமானம் 7 சதவீதமாக காணப்பட்டது. இது 2023 ஆம் ஆண்டில் 9 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டில் மொத்த தேசிய உற்பத்தியில் 12 சதவீதமாக வரி வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுப்பதாக இலங்கை அரசாங்கம் உறுதிமொழி வழங்கியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் 2025 ஆம் ஆண்டில் வரி வருமானத்தை மொத்த தேசிய உற்பத்தியில் 14 வீதமாக அதிகரித்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

## அமைச்சரவையில் மாற்றம்

(கொழும்பு)

அமைச்சரவையில் அடுத்த மாதம் மாற்றம் ஏற்படுத்தப்பட உள்ளதாக அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் தேர்தலை இலக்காக கொண்டு இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாற்றத்தில் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட வுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அமைச்சுப் பதவிகளுக்கான பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரின் பெயர் பட்டியல் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், அவர்களுக்கு இதுவரை அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

## இந்தியாவில் வாழும் இலங்கையர்களுக்கு சர்வதேச கடவுச்சீட்டு வழங்கி வைப்பு

(சென்னை)

தமிழகத்தில் சுமார் 40 ஆண்டுகளுக்கு மேலாக தஞ்சம் புகுந்து அகதி வாழ்க்கை வாழ்ந்துவரும் இலங்கை அகதிகளுக்கு சர்வதேச கடவுச்சீட்டு வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் வாழும் வடக்கு - கிழக்கைச் சேர்ந்த அகதிகளுக்கு, சர்வதேச கடவு ச்சீட்டு நேற்று முன்தினம் சென்னையில் வழங்கி வைக்கப்பட் டுள்ளது.

பல்வேறு காலகட்டங்களில் இலங்கையில் ஏற்பட்ட அசாதாரண யுத்த சூழ்நிலைகளின் போது இந்தியாவிற்கு தஞ்சம் புகுந்தவர்கள் கடந்த 40 வருடங்களுக்கும் மேலாக இந்தியாவின் பல்வேறு முகாம்களில் அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர்.

இவர்கள் இலங்கைக்குத் திரும்புவதாயினும் வெளிச் செல்லும் அனுமதி அட்டைகள் மாத்திரமே வழங்கப்பட்டு வந் தன.

இந்த நிலையினை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங் கவின்கவனத்துக்கு கொண்டு சென்றதாகவும், அவரது வழிகாட்டுதலின்கீழ், இந்தியவாழ் இலங்கை அகதிகளுக்கு உடன் நடைமுறைக்கு வரும் வகையில் இலங்கை அரசின் வர லாற்றில் முதற்தடவையாக சர்வதேச அங்கீகாரமிக்க கடவுச்சீட்டுகள் வழங்கி வைக்கப்பட்டன எனவும் கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார். (நி)

## 14 ஆயிரம் பண்ணைகளுக்கு பூட்டு – கோபாகுழு தகவல்

(கொழும்பு)

இலங்கையில் 14,000 கால் நடை பண்ணைகள் பல்வேறு காரணங்களால் அண்மையில் மூடப்பட்டுள்ளதாக அரசாங்க கணக்குகள் தொடர்பான பாராளுமன்ற குழுவில் தெரிய வந்துள்ளது.

இவ்வாறு மூடப்பட்டுள்ள பெரும்பாலான பண்ணைகள் சிறிய அளவிலானவை என கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

பண்ணைகளில் கால் நடைகள் திருட்டு போவது அதிகரித்துள்ளதால் அவை மூடப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

எவ்வாறாயினும், விலங்குகள் திருட்டு காரணமாக சிறு பண்ணைகள் மூடப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என கோபா குழு தெரிவித்துள்ளது. (நி)




கொக்குவில் மேற்கு
மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்
பஞ்சதள இராஜகோபுர அடிக்கல்
நாட்டு விழா


கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தின் சண்முகர்(தெற்கு) வாசலில் பஞ்சதள இராஜகோபுரம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா எதிர்வரும் 22.01.2024 திங்கட்கிழமை காலை 9.56 மணிமுதல் 11.02 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் இடம் பெற உள்ளது. எனவே முருகன் அடியவர்களை இந் நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இராஜகோபுர திருப்பணி வேலைகள் திரு. அருட்பிரகாசம் முரளிதரன் குடும்பம் முயற்சியில் திரு.அருட்பிரகாசம் ஜெயந்திரன் உட்பட ஆலய தர்மகர்த்தா சபையின் அனுசரணையில் முன்னெடுக்கப்படுகின்றது.

தர்மகர்த்தா சபை
மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்
கொக்குவில்.

(18705)


## நயினை அம்மனுக்கு 'தங்க குடம்'





(யாழ்ப்பாணம்)

நயினாதீவு நாகபூசணி அம்மன் திருக்குடமுழுக்கிற்காக தங்கத்திலான திருக்குடம் ஆலயத்தில் வைத்து பூஜை செய்யப்பட்டது.

குறித்த தங்க திருக்குட பவனி நேற்று சனிக்கிழமை காலை நடைபெற்று, திருக்குடமுழுக் கிற்காக கங்கா தரணி தீர்த்தக் கேணியில் இருந்து தீர்த்தம் எடுக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(நி-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



எமது உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தின் அதிபர் திரு.கி.தர்மசீலன் அவர்களின் மாமியார்

## திருமதி இலட்சுமி சுந்தரலிங்கம்

தோற்றம்:18.03.1947

மறைவு: 17.01.2024


அவர்கள் 17.01.2024 அன்று காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்

(18702)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378, 076 097 3127

# 22 ஆம் ஆண்டு நினைவு



அமரர் வாதவூர்

## தவச்செல்வம் Jp

(சிற்பனை, வேலணை)

தோற்றம் 15.12.1943 மறைவு 07.02.2002

எங்களின் வாழ்விற்காய்
அல்லும் பகலும் அரும்பாடு பட்ட
உங்களை என்றும் நாம் மறவோம்

இல.21/3A,
இந்து மகளிர் ஒழுங்கை,
கந்தர்மடம்.

நீங்கா
நினைவுகளுடன்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

பிறப்பு 11 - 01 - 1945



இறப்பு 20 - 01 - 2024

## திருமதி செல்வரெத்தினம் தவராணி

ஊரெழு கிழக்கைப் பிறப்பிடமாகவும் சுதுமலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வரெத்தினம் தவராணி அவர்கள் நேற்று (20.01.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் செல்வரெத்தினத்தின் (ஓய்வுபெற்ற மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்) அன்பு மனைவியும் ஜெயக்குமார் (முகாமைத்துவ அலுவலர் - வீதி அபிவிருத்தி அதிகார சபை), செல்வகுமார் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - வீதி அபிவிருத்தி திணைக்களம்), சோபிகா (வைத்தியர் - தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெயந்தினி, சதீபா (ஆசிரியர் - யா/தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும் சிந்துவர்மன் (பிரதி முகாமையாளர் - மக்கள் வங்கி) ஆகியோரின் அன்பு மாமியாரும் லஷாந், பபிஷாந், ஸஜீந் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் காலஞ்சென்ற குலோத்துங்க முதலியார் - அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லத்தம்பி - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஜெயராசா, ஜெயராணி மற்றும் குலராஜா, ஸ்கந்தராஜா, பரமராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான கனகம்மா, திலகவதி, சிவபாக்கியம், பஞ்சாட்சரம், நாகலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.01.2024) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3.00 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மாவத்தை ஒழுங்கை,
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.
(2ஆம் வட்டாரம், அல்லைப்பிட்டி)

(18707)

தகவல் : குடும்பத்தினர்
தொ.பே: 077 480 1265,
077 045 6898

# மரண அறிவித்தல்



## திருமதி ஈஸ்வரபாதம் வசந்தரூபா

மலேசியாவை பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகக் கொண்ட வருமான ஈஸ்வரபாதம் வசந்தரூபா அவர்கள் கடந்த (18.01.2024) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா பாக்கியலட்சுமி தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற ஈஸ்வரபாதம் அவர்களின் அன்புத் துணைவியும், காலஞ்சென்ற ஈஸ்வரபவானி மற்றும் ரூபரஞ்சனி, சரவணபவன் (நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர், நிர்வாக இயக்குநர் உதயன் - சஞ்சீவி நிறுவனம் ), ஸ்ரீரஞ்சனி (லண்டன்), முகுந்தன் (லண்டன் ), ஸ்ரீதரன் (லண்டன்), வசந்தினி (இந்தியா), கீதா கேதீஸ்வரி (லண்டன்), நவநீதன் (லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயும், காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் பாலசுப்பிரமணியம், யசோதை, சக்திதாசன் (லண்டன்), விமலாதேவி (லண்டன்), பிரேமினி (லண்டன்), ராஜேந்திரன் (இந்தியா), ஸ்ரீகாந்தா (லண்டன்), சுகந்தினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் திருமதி ரஞ்சிதம் ராஜரத்தினம் (சிங்கப்பூர்), லீலா ராங்கநாதன் (மலேசியா), காலஞ்சென்ற அமலரதி மகேஸ்வரன் (மலேசியா) மற்றும் காலஞ்சென்ற மதனபூபாலன் (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்பு சகோதரியும் ரமணன், இசுரிகா, உமையாள், ஜெயபிரகாஷ், சிந்தியா.சுரேஸ்குமார், அபிராமி, அமர், சித்ரூபி, பிரகதீபன், பிரவீன்.வினிதா வைஷ்ணா, சாம், லக்ஷ்மி, விதுன், ரம்யா, வினோத், பிரஷிகன், சேயோன், விஷ்ணு ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், கேசவா, துருவா, நேத்ரா, டீரன், அக்ஷயன், ஆராதனா, லூஷியஸ், ஜவி, நோஆ ஆகியோரின் அருமைப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் திங்கட்கிழமை (22.01.2024 ) காலை 08.30 மணிக்கு 105, இராஜ வீதி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 11 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தோற்றம் 26.10.1929

மறைவு 18.01.2024

105, இராஜவீதி,
கோப்பாய், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவிரமடையும் டெங்கு; அதிகரிக்கும் நோயாளர்கள்

## மீண்டும் எச்சரிக்கும் சுகாதார தரப்பு

(கொழும்பு)

நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலைக்கு மத்தியில் டெங்கு நோயின் தாக்கமும் அதிகரித்து வருகின்றது.

குறிப்பாக யாழ் மற்றும் கொழும்பு மாவட்டங்களில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக சுகாதார தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆண்டின் முதல் 19 நாட்களில் நாடு முழுவதிலும் மொத்தமாக 6998 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு அறிவித்துள்ளது. (நி)



புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 16 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட 2,346 பிள்ளைகளுக்கு 51 லட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த கற்றல் உபகரணங்கள் கடந்த வாரம் வழங்கி வைக்கப்பட்டன. சிறுவர் பாதுகாப்பு நிதிய நிறுவனத்தின் நிதி அனுசரணையில் AU Lanka நிறுவனம் குறித்த செயற்திட்டத்தை நிறைவேற்றியது. (படம்:-கிருஷ்ணகுமார்)

# கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின்
சிரேஷ்ட விவசாய உயிரியல்
பேராசிரியர் கு.மிகுந்தன்
அவர்களின் பாசமிகு தாயார்

## திருமதி. சரோஜினிதேவி குணசிங்கம்



பிறப்பு 15.12.1940

இறப்பு 18.01.2024

அவர்கள் காலமான செய்தியறிந்து
மிகுந்த துயரடைகின்றோம்.
அன்னாரின் ஆத்மா எல்லாம் வல்ல இறைவனின்
திருவடிகளில் சாங்கமிக்க வேண்டுவதுடன்
அவரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி! (இ)

பிரிவுத்துயரில் பங்குகொள்ளும்
வலம்புரி நிர்வாகம்

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி | 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 10 . 06 . 1931 இறப்பு 21 . 01 . 2022

அமரர். கணபதி மார்க்கண்டு



தோற்றம் 20 . 03 . 1937 மறைவு 20 . 08 . 2011

அமரர். மார்க்கண்டு பரிமளம்

அன்பின் திருவுருவே எட்ட முடியாத தொலைவு சென்று
ஆண்டுகள் இரண்டல்ல ஓராயிரமாகாலாம்
காலங்கள் விடைபெறலாம் நெஞ்சில் பதித்த நினைவலைகள்
என்றென்றும் நம்மை விட்டு நீங்காது.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

(18676)

குடும்பத்தினர்,

# இராசிபலன்

21.01.2024
தை 07, ஞாயிற்றுக்கிழமை
ஏகாதசி முன்னிரவு 10.03 மணிவரை
ரோகிணி பின்னரவு 6.10 மணிவரை

சுபநேரம் -9.35-11.05 மணிவரை
இராகுகாலம்-5.05-6.35 மணிவரை
ஏகாதசி விரதம்,

சந்திராஷ்டமம்
சித்திரை.

வளவன்

**மேஷம்** சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், பணப்புளக்கம் அதிகரிக்கும் நாள்.

**ரிஷபம்** திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், பல நாட்களாக பார்க்காமல் இருந்த உறவினர் ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**மிதுனம்** குடும்ப பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், புதிய நட்பால் சுபவிரயங்கள் ஏற்படலாம்.

**கடகம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள்.

**சிம்மம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பிறரது ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்

**கன்னி** பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், ரோக பயமுண்டு, குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**துலாம்** அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும், உடல் நலனில் கவனம் தேவை.

**விருச்சிகம்** எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், சென்ற இடங்களில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், புதிய பொருட்களை வாங்குவதில் பிரியப்படுவீர்கள்.

**தனுசு** கடன் பிரச்சினைகளை மாற்றியமைப்பீர்கள், உடல் நலன் சீராகும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**மகரம்** மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.

**கும்பம்** மனதில் தோன்றுவதைச் செய்வீர்கள், உறவினர் வழியில் ஏற்பட்ட தகராறுகள் அகலும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம்.

**மீனம்** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

மிகவும் விரய[illegible] நாள் [illegible]காத நாள் மட்டுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயவிடப்பட்ட வேளையில் மழையில் நனைந்த நெல்

## விவசாயிகளை விடாது துரத்தும் துயரம்



(தருமபுரம்)

அறுவடை நேரத்தில் பெய்த மழையால் கிளிநொச்சி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது காலபோக நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நெல் காயவிடும் தளங்கள் இல்லாமையினால் பரந்தன் பூநகரி வீதியில் காயவிடப்பட்ட நெல்கள் கடந்த வியாழக்கிழமை பெய்த மழையில் நனைந்துள்ளன.

நோய்த் தாக்கங்களுக்கு மத்தியில் குறைந்த விளைச்சலோடு அறுவடை செய்த நெல்லை காயவிட்ட போதே மழையில் நனைந்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர். இந்த போகத்தில் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதால் அதற்கான நட்ட ஈட்டை அரசாங்கம் தர வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்தனர். (நி-316)

## டிவகலாலா நினைவு தினம் இன்று

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளர் சுந்தரம் டிவகலாலாவின் முதலாம் ஆண்டு நினைவு தினம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு தந்தை செல்வா கலையரங்கில் (யாழ்.மத்திய கல்லூரி அருகாமை) வவுனியா பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் நினைவுப் பேருரையை பேராசிரியர் ஜெயலக்சுமி இராஜநாயகம் நிகழ்த்தவுள்ளார். (நி)

## சடலத்தை பொறுப்பேற்றல்

(யாழ்ப்பாணம்)

08.01.2024 அன்று எமது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட எஸ்.சுப்பிரமணியம் வயது-61 என்பவர் 14.01.2024 அன்று இறந்துவிட்டார்.

இவர் ஆவரங்கால் கிழக்கு புத்தூரை வசிப்பிடமாகக் கொண்டவர். இவருடைய உடல் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

உடலை அடையாளம் காட்டி 15 தினங்களுக்குள் பெற்றுக்கொள்ளுமாறு யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (நி)

## புகைப்பட விழா 2024

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புகைப்பட திருவிழா எதிர்வரும் 26 ஆம் திகதி முற்பகல் 10:30 இற்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

இத்திரைப்பட விழா வானது இலக்கம் 50 கண்டி வீதி கலம், கலாசார சந்திப்புகளுக்கான இடத்தில் நடைபெறவுள்ளது. (நி-33)

## வட்டுவாகல் பாலத்தில் மின்குமிழ்களை பொருத்துங்கள்

### கிராம மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

வட்டுவாகல் பாலத்திற்கு மின்குமிழ்கள் பொருத்தப்பட வேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப்பாலம் பல இடங்களில் சேதமடைந்து காணப்படுகின்றது. முல்லைத்தீவு நகரில் இருந்து புதுக்குடியிருப்பு, பரந்தன், யாழ்ப்பாணம், கிளி நொச்சி போன்ற இடங்களுக்கான போக்குவரத்துகள் இப்பாலம் ஊடாகவே மேற்கொள்ளப்படுகின்றது.

அத்துடன் நந்திக் கடலில் மீன்பிடியில் ஈடுபடுபவர்கள் வட்டுவாகல் பாலத்திலேயே தமது மீன்களை வலைகளில் இருந்து தெரிவு செய்வர்கள்.

இவ்வாறான காரணங்களால் வட்டுவாகல் பாலத்திற்கு மின்குமிழ்கள் பொருத்துவது அவசியமாகிறது.

கடந்த காலங்களில் வட்டுவாகல் பாலத்திற்கு மின்குமிழ்கள் பொருத்த வேண்டும் என்ற தீர்மாணங்கள் நிறை வேற்றப்பட்ட போதிலும் தற்போது வரை வட்டுவாகல் பாலத்தில் மின்குமிழ்கள் பொரு த்தப்படவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (நி-350)

## மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை மகாதனை கோண சீம திருவருள் மிகு ஸ்ரீ நரசிம்ம வைரவர் ஆலய மகாகும்பாபிஷேக விஞ்ஞாபனம் எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 22 ஆம் திகதி கிரியைகள் ஆரம்பமாகி மறுநாள் (23) எண்ணெய்க்காப்பு இடம் பெறவுள்ளதுடன் 24 ஆம் திகதி காலை 9.50 மணிமுதல் 10.50 மணி வரையான சுப நேரத்தில் மகாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. (நி-33)

## மேய்ச்சல் தரவை இன்மையால்

### கால்நடை வளர்ப்பாளர்கள் நெருக்கடியில்

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயனில் மேய்ச்சல் தரவை இல்லாததன் காரணமாக கால்நடை வளர்ப்பாளர்கள் நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ளனர்.

அக்கராயன் பிரதேசத்தில் 5 ஆயிரத்திற்கு மேற்பட்ட கால்நடைகள் உள்ளன. சிறுபோக நெற்செய்கை காலத்தில் அக்கராயன் குளத்தின் பின் பகுதியில் கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுத்துவது வழமை.

ஆனால் காலபோக நெற்செய்கை காலத்தில் குளத்தில் நீர் மட்டம் அதிகரிப்பதன் காரணமாக கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுத்த முடியாத நிலையில் கால்நடை வளர்ப்பாளர்கள் உள்ளனர்.

திருமுறிகண்டி, அக்கராயன், வன்னேரிக்குளம் வீதிக்கு அருகில் மேய்ச்சலில் ஈடுபடுத்துமாறு தீர்மானம் எடுக்கப்பட்டது.

கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களை பிரிக்கின்ற வீதியாக இவ்வீதி காணப்படுகின்றது. அத்துடன் வீதியின் இரு பகுதியிலும் குடும்பங்களும் வசித்து வருவதுடன் பயிர்ச்செய்கைகளும் இடம் பெறும் நிலையில் குறித்த வீதிக்கு அருகில் கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுத்த முடியாத நிலைமை காணப்படுகின்றது.

இந்நிலையில் அக்கராயன் கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுத்துவதற்கான மேய்ச்சல் தரவையினை இனங் காட்டுமாறு அதிகாரிகளிடம் கால் நடை வளர்ப்பாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-350)

## பொன்னாலை வரதராஜப்பெருமாள் கோயிலில் ராமர்-சீதைக்கு சிறப்பு பூஜைகள்

(யாழ்ப்பாணம்)

ராம ஜென்ம பூமியாகிய அயோத்தியில் நடைபெறவுள்ள மிகப் பிரம்மாண்டமான கும்பாபிஷேகப் பெருவிழாவை முன்னிட்டு இலங்கை பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் ராமர்- சீதைக்கான சிறப்பு பூஜை வழிபாடுகள் இடம் பெறவுள்ளன.

இச்சிறப்பு வழிபாடுகள் நாளை முற்பகல் 10 மணியளவில் மேற்படி ஆலயத்தில் இடம்பெறுவதற்கான ஏற்பாடுகளை இலங்கை சிவசேனை அமைப்பினர் ஏற்பாடு செய்துள்ளனர்.இந் நிகழ்வில் சிறப்பு விருந் தினராக யாழ். இந்தியத் துணைத் தூதுவர் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (நி)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 550 | 700 | 600 | 600 |
| உருளைக்கிழங்கு | 160 | 180 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 1000 | 1000 | 900 | 1200 |
| தக்காளி | 550 | 500 | 600 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 120 | 150 | 150 |
| கோவா | 750 | 700 | 700 | 600 |
| கரட் | 1500 | 1800 | 1600 | 1800 |
| பூசணி | 140 | 150 | 150 | 200 |
| புடோல் | 350 | 250 | 300 | 300 |
| வாழைக்காய் | 250 | 240 | 200 | 300 |
| சின்ன வெங்காயம் | 450 | 380 | 450 | 450 |
| பெரிய வெங்காயம் | 380 | 380 | 400 | 450 |
| பாகற்காய் | 800 | 650 | 600 | 1200 |
| வெண்டக்காய் | 450 | 500 | 300 | 600 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 140 | 200 |
| பயற்றங்காய் | 700 | 700 | 800 | 600 |
| லீக்ஸ் | 450 | 650 | 550 | 800 |
| பீற்றூட் | 800 | 700 | 700 | 900 |
| கறிமிளகாய் | 650 | 650 | 800 | 1200 |
| முருங்கைக்காய் | --- | --- | 3000 | 3000 |
| போஞ்சி | 650 | 600 | 600 | 1000 |
| கத்தரிதம்புள்ள | 500 | 400 | 600 | 500 |
| கீரை – 1 பிடி | 150 | 150 | 150 | 200 |
| தேசிக்காய் | 250 | 300 | 200 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 90 | 70-100 |
| இராசவள்ளி | 800 | 600 | 500 | 600 |
| வெங்காயப்பூ | 600 | 450 | 600 | 1000 |
| முள்ளங்கி | 200 | 200 | 300 | 300 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 150 | 60 |
| வல்லாரை | 80 | 200 | 50 | 80 |
| ஈரப்பலா | 100 | 100 | 100 | 150 |

## போதைப் பாவனை தீவிரம் கட்டுப்படுத்த கலந்துரையாடல்

(முல்லைத்தீவு)

அதிகரித்துவரும் சட்ட விரோத கசிப்பு உற்பத்தி, போதைப்பொருள் பாவனையால் இளம் சமுதாயத்தினர் தம் எதிர் காலத்தை இழந்துவிடும் அவலநிலை ஏற்பட்டுள்ளது.

இதனை கட்டுப்படுத்தும் நோக்கோடு முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, கர்ணன் குடியிருப்பு பகுதி மக்களுக்கும் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஹேரத் உள்ளிட்ட குழுவினருக்கும் இடையில் கடந்த வியாழக்கிழமை இரவு கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இக் கலந்துரையாடலில் போதை ஒழிப்பது தொடர்பாகவும் அதற்கு எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டிருந்தது.

இக்கலந்துரையாடலின் போது புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஹேரத் எந்நேரத்திலும் போதை ஒழிப்பு தொடர்பான விடயங்களை அறியப்படுத்துமாறும்; எந்நேரமும் தாம் உதவி செய்ய தயாராக இருப்பதாகவும் போதைப் பொருள் பாவனையை ஒழிக்க தம்மால் முடிந்த உதவிகளை செய்வதாகவும் தெரிவித்தார். (நி-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வலம்புரியின் வாரமலர்

சங்குநாதம்

நாதம் 424

Viber 076 636 3378





# கேள்விக்குறியாகும் நிறைவேற்று அதிகாரம்?

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ளது. இதுவே நாட்டின் முன்னேற்றத்திற்கு பெரும் முட்டுக்கட்டையாக இருக்கிறது என்பது பலரின் கருத்து.

ஒரு வகையில் அது ஏற்றுக் கொள் ளக் கூடிய ஒன்றே. ஏனெனில் அரசி யல் வாதிகளின் பிரதான தேர்தல் வாக்குறுதியாக "நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழித்தல்" இருப்பது இதற்கு தகுந்த சான்றாகிறது.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமை ஒரு ஆணைப் பெண் ணாக்கவோ பெண்ணை ஆணாக்கவோ கூடிய அதிகாரம் உண்டு என பலர் விமர்சித்திருப்பதை நாம் இதனூடே அறிந்து கொள்ள முடியும்.



நல்லாட்சியின் ஆட் சிக்காலத்தில் அப்போதைய ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன ஜனாதிபதியின் அதிகாரங்களை ஓரளவு குறைத்து அவற்றை பாராளுமன்றத்திற்கு வழங்கினார்.

ஆயினும் அவரினால் ஜனாதிபதியின் முழுமையான அதிகாரங்களையும் குறைக்க முடியவில்லை.

தனிமனிதர் ஒருவரினால் எடுக்கப்படும் முடிவுகளை விட குழுவாக பரிந்துரைக்கும் முடிவுகள் உண்மையானதும் நேர்மையானதுமாய் இருக்கும் என்பதை பல விடயங்களூடே நாம் அறிந்து கொள்ளலாம்.

வன்னிப் பெருநிலப் பரப்பில் தமிழினம் கொத்துக் கொத்தாய் மடிந்து போக நிறைவேற்று ஜனாதிபதி முறைமையே காரணம் என்பதை எவரும் மறுத்து விட முடியாது.

அந்தளவிற்கு ஜனாதிபதியின் அதி காரங்களினூடே தமிழினம் அழிக் கப்பட்டதை இதற்குத் தகுந்த ஆதாரமாக காட்டிவிட முடியும்.

கடந்த புதன்கிழமை முன்னாள் எம்.பி துமிந்த சில்வாவுக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வழங்கிய பொது மன்னிப்பு தவறானது என உயர் நீதிமன்றம் அறிவித்தி ருக்கிறது.

2011 ஆம் ஆண்டு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷமன் பிரேமச்சந்திர படுகொலை செய்யப் பட்டமை தொடர்பில் துமிந்த சில்வா உள்ளிட்ட நால்வருக்கு 2016 ஆம் ஆண்டு நீதிமன்றினால் மரணதண்டனை வழங்கப்பட்டது.

இந்நிலையில் 2021 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ துமிந்த சில்வாவுக்கு பொதுமன்னிப்ப ளித்து அவரை விடுதலை செய்தார்.

இவ்விடயம் அப்போது தென்னிலங்கையில் பெரும் பேசுபடு பொருளானது. இதற்கு பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர வின் மனைவி சுமனா பிரேமச்சந்திர மற்றும் மகள் ஹிருணிக்கா ஆகியோரினால் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையிலேயே கடந்த புதன்கிழமை துமிந்த சில்வாவுக்கு வழங்கப்பட்ட பொது மன்னிப்பு அப்போதைய ஜனாதிபதி கோட்டாபயவின் தனிமனித முடிவினால் வழங்கப்பட்டது எனவும் அதை செல்லுபடி அற்றதாக்குவதுடன் துமிந்த சில்வாவினைக் கைது செய்யுமாறும் உயர் நீதி மன்றால் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் இலங்கையில் நீதித்துறையின் சுயாதீன இயங்கலை தெளிவு படுத்தி இருப்பதுடன் இலங்கை ஜனநாயக நாடு என்பதை எடுத்தியம்பியிருக்கிறது.

**துமிந்த சில்வாவுக்கு வழங்கப்பட்ட பொது மன்னிப்பு தவறு எனின் மிருசுவில் படுகொலை வழக்கில் மரண தண்டனை வழங்கப்பட்டவருக்கான பொதுமன்னிப்பையும் நீதிமன்றினூடே கேள்விக் குறியாக்க முடியும்.**

நிறைவேற்று ஜனாதிபதியின் தன்னிச்சையான முடிவுகளை சட்டத்தினூடே கேள்விக்குறியாக்கும் செயற்றிட்டத்தில் கடந்த 2000 ஆம் ஆண்டு குழந்தைகள் உட்பட எட்டு தமிழர்கள் கழுத்தறுத்துப் படுகொலை செய்யப்பட்ட மிருசுவில் படுகொலைக் குற்றவாளியின் பொதுமன்னிப்பையும் பொய்ப்பிக்கும் செயற்றிட்டத்தில் எமது தலைவர்கள் முன்னிற்க வேண்டும்.

ஆம் கடந்த 2000 ஆம் ஆண்டு மிருசுவிலில் எட்டு தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் 2015 ஆம் ஆண்டு மரண தண்டனை விதிக்கப் பட்ட இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த சுனில் ரத்தின நயக்கவிற்கு 2020 ஆண்டு அப்போதைய ஜனா திபதி கோட்டாபய ராஜபக்ஷ பொது மன்னிப்பளித்து விடுதலை செய்யப்பட்டிருந்தது.

பாரத லக்ஷ்மன் பிரேமச்சந் திரவின் கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட மரணதண் டனைக் குற்ற வாளிக்கு பொது மன்னிப்பு வழங்கியது தவறு என உயர் நீதிமன்றம் அறிவித்திருக்கிறது எனின் நிச்சயம் மிருசுவில் படுகொலை தொடர்பான வழக்கில் மரணதண் டனை வழங்கப்பட்டவருக்கான பொது மன் னிப்பினையும் நீதியினூடே கேள்விக்குறியாக்க முடியும்.

ஏனென்றால் இவ் இரண்டு பொது மன்னிப்பையும் வழங்கியவர் ஒருவரே. இவ் விடயத்தில் காலம் தாழ்த்தாது தமிழ் சட்ட நிபுணர்கள் களத்தில் இறங்குவது காலத்தின் கட்டாயமாகும்.



தமிழ் அரசியல் கைதி ஆனந்தசுதாகரனை விடுதலை செய்வதாக முன்னாள் ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன வாக்குறுதி வழங்கியிருந்தார். "அடுத்த பொங்கலுக்கு உங்கள் அப்பா உங்களுடன் இருப்பார்" என மைத்திரிபால சிறிசேன ஆனந்த சுதாகரனின் பிள்ளை களிடமே குறித்த வாக்குறுதியை வழங்கியிருந்தார்.

ஆயினும் அது நடந்தேறவில்லை. இன்று வரை ஆனந்தசுதாகரன் சிறையிலேயே தனது காலத்தைக் கழித் துக்கொண்டிருக்கிறார்.

மைத்திரிபால விடுதலை செய்வதாகக் கூறியிருந்தாலும் ஆனந்தசுதாகரனுக்கு விடுதலை கிடைக்கவில்லை எனின் அங்கு நிலவிய அரசியல் சூழல் விடுதலையை எதிர்க்கும் அழுத்தம் என்பவற்றை நாம் புரிந்து கொள்ள முடியும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் தன்னிச்சையான முடிவுகளை சட்டத்தின் முன் கேள்விக்குறியாக்குவது நிச்சயம் அவ்வாறான தவறுகளை இனியொரு போதும் நடை பெறாமல் தடுக்க உதவும்.

அத்துடன் சகலரின் விருப்பத் தெரிவான நிறைவேற்று அதிகார ஜனாதி பதி முறைமையினை ஒழித்து, பலமான பாராளுமன்றை உருவாக்கி அதை நடைமுறைக்குக் கொண்டுவருவது சர்வசாதாரணமான விடயமல்ல.

அபிமன்யு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வாத்தியார்** வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபையின் தலைவர் நாயன்மார்கட்டு சிவஸ்ரீ மகாலிங்கசிவக்குருக்களின் மகள் திருமதி. சங்கரி மதிரூபக் குருக்கள் அவர்கள் காலமான செய்தி அறிந்து மிகுந்த வேதனை அடைகின்றோம். அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இரண்டு நிமிடம் பிரார்த்திப்போம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிடம் மௌனமாக இறை பிரார்த்தனை செய்து அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** இண்டைக்கு தமிழரசுக் கட்சியின்ர தலைமைப் பதவிக்குத் தெரிவு நடக்கப் போகுது. ஆருக்குச் சந்தர்ப்பமாம்.

**வாத்தியார்:-** யாருக்குச் சந்தர்ப்பம் என்பதை விட, தேர்தலின்ர முடிவுகளுக்குப் பின்னர் அந்தக் கட்சிக்குள்ள முரண்பாடுகள் இருக்காமல் பார்த்துக் கொள்ள வேணும்.

மற்றும் படி இப்ப எங்கட சனங்களுக்கு கட்சி பற்றி எந்தக் கவலையும் இல்லை. முன்புதான் நாங்கள் தமிழரசுக் கட்சி எண்டு உயிரை விட்டம்.

**பண்டிதர்:-** சாம் என்றைக்கு கட்சியின்ர கடிவாளத்தைப் பிடித்தாரோ அண்டைக்கு கட்சி தடம் புரளத் தொடங்கிற்று.

**மூப்பர்:-** நேர்மையில்லாமல் யார் நடந்தாலும் அது கட்சியை உருப்பட விடாது.

**கங்காணி:-** மூப்பர் சொல்லுறது நூறு வீதம் உண்மை. இப்ப சாம் ஐயா முதுமை நிலையில உள்ளார். ஆனால் அவர் ஒரு நேர்மையான தலைவர் அல்ல. தமிழ் மக்களுக்கு அவர் கெடுதி செய்து போட்டார்.

சிங்கள ஆட்சியாளர்களோட சேர்ந்து தமிழ் மக்களுக்கு அவர் அநிதி இழைத்துப் போட்டார். இந்த அபத்தத்தைத் தமிழ் மக்கள் ஒரு போதும் மறக்க மாட்டினம்.

ஆகையால, இனி தமிழரசுக் கட்சியின்ர தலைவராக யார் வருகினமோ அவர்கள் நேர்மையாகக் கட்சியை வழிப்படுத்த வேணும்.

இல்லையெண்டால்,



## குப்பைகளைப் பொதுமக்கள் வீதிகளில் கொட்டுவது ஏன்?

நீண்ட, நெடுங்காலம் கொண்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியின்ர எதிர்காலம் கேள்விக் குறியாகிவிடும்.

**சாத்திரியார்:-** நீங்கள் என்னதான் சொன்னாலும் இனிவரும் காலங்களில தமிழ் அரசியல் கட்சிகளால, தமிழ் மக்களின்ர செல்வாக்கைப் பெற முடியாது.

ஆக, தேர்தல் காலங்களில மட்டும் சனங்கள் வாக்களிப்பினம். அதைவிட இது என்ர கட்சி, எங்கட அப்பா இந்தக் கட்சியல தான் இருந்தவர், எங்கட குடும்பமே இந்தக் கட்சிக்குத் தான் ஆதரவு எண்ட கதையெல்லாம் இனி இருக்கப் போறதில்லை.

இவ்வாறு சாத்திரியார் கூறியதும் அதனை அனைவரும் சம்மதிப்பது போல ஆலடியில் மௌனம் நிலவியது.

மௌனத்தைக் கலைக்க சிறாப்பர் கனகசபை குரல் கொடுத்தார்.

**சிறாப்பர்:-** அது சரி, வடமாகாணத்தில டெங்கு கண்டபாட்டில அதிகரித்துக் கொண்டு போகுது. இதைத் தடுத்து நிறுத்த ஒரு வழியும் இல்லையோ.

**விதானையார்:-** இஞ்ச ஆரு இருக்கினம். வீதிகளிலும் ஒழுங்கைகளிலும் சனங்கள் குப்பைகளைக் கொட்டுதுகள். அதைத் தடுக்க எவரும் இல்லை. அதால குப்பைகளைச் றோட்டில போடுகிற காரியம் தொடருது

**வாத்தியார்:-** இஞ்சே விதானையார், சனங்கள் வீதிகளில குப்பைகளைப் போடுகிறதுக்கு இன்னுமொரு காரணமும் இருக்குது.

**கங்காணி:-** என்ன வாத்தியார் சொல்லுறியள். சொல்லுறதைக் கொஞ்சம் தெளிவாகச் சொல்லுங்களன்.

**வாத்தியார்:-** சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் குப்பைகளை அகற்றுவதற்குக் கடும் நிபந்தனை விதிக்கினம். தரம் பிரிக்காத குப்பைகளை எடுக்க மாட்டோம் எண்டு விட்டுட்டுப் போகினம். அதோட கட்டணத்தில கழிவு அகற்றுகிறதாக இருந்தாலும் சம்திங் கொடுத்துத்தான் ஆக மொத்தம்.

இல்லையெண்டால், ஆயிரம் கதை. இதனால சனங்கள் பார்த்தினம் வீட்டுக் குப்பைகளைக் கொண்டு போய் றோட்டில போட்டு விட்டால், அவற்றைத் தெரு நாய்கள் தரம் பிரித்துக் கொடுக்கும். அதன் பிறகு உரிய சபையின்ர ஊழியர்கள் அகற்றுவினம் தானே!

**விதானையார்:-** என்ன இருந்தாலும் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் தங்கட கடமையைச் சரிவரச் செய்ய வேணும். ஒரு பகுதித் தொழிலாளர்கள் நேர்மையாக நடக்க, இன்னொரு தொழிலாளர் தரப்பு இலஞ்சம் வாங்கினால் எல்லாம் அம்போ எண்டாகிவிடும்.

அதோட, குப்பை எடுக்கிறதாக இருந்தால் அதை வெறுப்பு, சினப்பு இல்லாமல் செய்ய வேணும்.

இதைவிட்டிட்டு சனங்களோட சீறிச்சினந்தால், சனங்கள் மௌனமாக இருந்து தங்கட வேலையைக் காட்டிப் போடுவினம்.

**சிறாப்பர்:-** ஓ! இப்ப எங்கும் இலஞ்சம் தானே. சொல்லப்போனால் பொலிஸார் எங்க உழைக்கலாம் எண்டு ஓடித் திரியினம். அதிலும் போக்குவரத்துப் பொலிஸாரின்ர அநியாயம் சொல்லிமாளாது.

இரவு வேளைகளில வெளிச்சம் இல்லாத இருட்டு இடங்களில தான் பொலிஸார் மறைஞ்சு நிப்பினம். உண்மையில பொலிஸார் நிற்கினம் எண்டால், அது மற்றவர்களுக்குத் தெரியக் கூடியதாக இருக்க வேணும்.

இதை விட்டிட்டு ஏதோ போதைவஸ்து வியாபாரிகளைக் கைது செய்யிறது போல, கொலைகாரனை மடக்கிப் பிடிப்பது போல மரங்களிலும் இருட்டான இடங்களிலும் பொலிஸார் மறைஞ்சு நிற்பது எதற்கு எண்டது தெரியுது தானே!

**மூப்பர்:-** எல்லாவற்றுக்கும் பொலிஸாரைக் குறை சொல்வதாக ஆரும் நினைக்கலாம். ஆனால் எங்கட வடமாகாணத்தில நடக்கிற அத்தனை அநியாயங்கள், அட்டூழியங்களுக்கு ஆதரவாகப் பொலிஸார் சிலர் இருக்கினம். அதால, அவர்களின்ர அட்டகாசம் தாங்க முடியல்ல.

**சிறாப்பர்:** என்ன மூப்பர் சொல்லுறியள் எதையும் கொஞ்சம் தெளிவாகச் சொன்னால் தானே தெரியும்.

**மூப்பர்:-** மீற்றர் வட்டி, போதை வியாபாரம், அடாவடித்தனம், காணி அபகரிப்பு, பொருட்களைக் கடனுக்கு வாங்கியவர்கள் காசைத் திருப்பிக் கொடுக்காமல் ஏமாற்றுகின்ற நாடகம் இவையெல்லாவற்றையும் எடுத்து ஆராய்ந்தால், இவ்வாறு அநியாயம் செய்கிறவர்களுக்குச் சப்போட்டாகப் பொலிஸார் இருப்பதைக் காணலாம்.

பொலிஸார் தங்களுக்குச் சப்போட்டாக இருக்கினம் எண்ட துணிச்சலில எல்லா அக்கிரமங்களையும் சம்பந்தப்பட்டவர்கள் செய்யத் தலைப்பட்டுள்ளனர்.

அதேநேரம் அப்பாவிப் பொதுமக்கள் பொலிஸாருக்குப் பயந்து தங்கட சொத்துக்களை மீட்க முடியாமல் வேதனைப்படுகினம்.

ஆகையால இதுவிடயத்தில பொலிஸ் பொறுப்பதிகாரிகள் மிகவும் விழிப்பாக இருந்து, அநியாயம் செய்கிறவர்களுக்கு ஆதரவாக இருந்து இலஞ்சம் பெறுகிற பொலிஸாரை இனங்கண்டு அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க வேணும். அப்பதான் எங்கட வடபுலத்தில சட்ட விரோதச் செயல்கள் கட்டுப்படும்.

இவ்வாறு மூப்பர் சொல்ல அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.


**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




நான் இறந்தாலும் இவன் இறக்க வில்லை என்பதை இவ்வுலகம் நினைக்க வேண்டும் என்றால் யார் வாழ்வை பின்பற்ற வேண்டும்.



டெங்கு குடாநாட்டை உலுக்குகிறது. இதற்கு மக்கள் எவ்வாறு அவதானமாக இருக்க வேண்டும் வியாசரே?

**சுதன் — குப்பிளான்**

**பாரத லக்ஷ்மனுக்கு நீதி கோரியவர்கள் பிஸ்கட் கொடுத்துவிட்டு கொலை செய்த பாலச்சந்திரனுக்கு நீதி வாங்கித் தருவார்களா?**

என்ன செய்வது. தந்தையில் இருக்கும் வெறுப்புணர்வை பிள்ளையில் காட்டுகிறார்கள் போலும்.
இலங்கை வரலாற்றில் ஜனாதிபதியினால் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டது தவறு என நீதிமன்றம் சுட்டிக்காட்டியிருக்கிறது.
இது நாட்டின் ஜனநாயகத்தின் உயர் பண்பை எடுத்துக்காட்டி நிற்கிறது.
பாலச்சந்திரனுக்கான நீதி இலங்கையில் வழங்கப்படாவிட்டாலும் நரகத்தில் வைத்து வழங்கப்படும் கவலை வேண்டாம் தம்பி.

**டனுசாந் — திருநெல்வேலி**

**அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் செய்து எந்த விதப் பிரயோசனமும் இல்லை. இருந்தும் அதை ஏன் நாம் செய்கிறோம் வியாசரே?**

அரசாங்கம் தமிழினத்திற்கு எதிராகச் செயற்படுகிறது.தமிழினத்துக்கான நீதியைத் தர. மறுக்கிறது. பெரும்பான்மையினருக்கு ஒரு முகமும் சிறுபான்மையினருக்கு இன்னொரு முகத்தையும் காட்டுகிறது.
இது ஒருநாளும் அறம் ஆகாது. இதனை நாம் நிச்சயம் எதிர்க்க வேண்டும்.இல்லையேல் பேரினவாத சக்திகள் எம் தலையின் மேல் ஏறியிருந்து உள்ளி, மிளகு அரைத்துவிடுவார்கள்.
ஆனால் எமது தமிழ் அரசியல் வாதிகளால் மேற்கொள்ளப்படும் ஆர்ப்பாட்டங்கள் முழுக்க முழுக்க தமது அரசியல் ஆதாயத்துக்கானது.
இது தான் பொது மக்களுக்கும் அரசியல் தலைவர்களுக்கும் இடையில் இருக்கும் வித்தியாசம்.

**திகான் — வடமராட்சி**

**டெங்கு குடாநாட்டை உலுக்க்கிறது. இதற்கு மக்கள் எவ்வாறு அவதானமாக இருக்க வேண்டும் வியாசரே?**

டெங்கு மரணங்களை பார்க்கும் போது கடவுளே ஏன் தமிழினத்திற்கு மீண்டும் மீண்டும் துன்பத்தைக் கொடுகின்றாய் என்ற எண்ணமே மேலோங்கி நிற்கிறது.
டெங்கு பெருகும் இடங்களை தேடி அழிப்பதுடன் குறிப்பிட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படுகிறது. இவ் விடயம் வரவேற்கத்தக்க விடயம் ஆயினும் வீதிகளின் ஓரத்தில் இருக்கும் கால்வாய்களில் கழிவு நீர் தேங்கி நிற்கிறது. அதில் கோடிக்கணக்கான நுளம்புகள் குடும்பம் நடத்துகிறது.இதைக் கவனிக்காமல் வீடுகளுக்குச் சென்று அவர்களுக்கு நடவடிக்கை எடுப்பதால் ஒருநாளும் டெங்கு நுளம்பு கட்டுப்படாது.

அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
076 097 3126
என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்

**கனேஷ் — பருத்தித்துறை**

**யுக்திய சுத்திவளைப்புகளின் மத்தியில் மாபியாக்கள் உள்ளனரா வியாசரே?**

சட்டவிரோத செயற்றிட்டங்களை முறியடிக்கும் யுக்திய நடவடிக்கையை ஆரம்பிக்கப்பட்டதும் பாதுகாப்புத்தரப்பினரால் நூறு, இருநூறு, ஐநூறு, அறுநூறு,ஆயிரம் கிலோ போதை வஸ்துக்கள் கைப்பற்றப்பட்டதுடன் பல்லாயிரக்கணக்கானவர்கள் கைதும் செய்யப்பட்டுள்ளார்கள்.
யுக்திய திட்டங்களை அறிமுகப்படுத்திய அடுத்த கணமே இவ்வளவு நடவடிக்கை என்றால் ஏன் இதைப் பாதுகாப்புத தரப்பு ஏலவே செய்யவில்லை. என்ற கேள்வி எழுமல்லா?
இதற்குத் தான் சூட்சுமமே இருக்கிறது.
கள்ளன் பொலிஸ் விளையாட்டை சிறு வயதில் விளையாடியது இப்போது ஞாபகத்திற்கு வருகிறது.

**விஜயதரன் — உரும்பிராய்**

**ஜல்லிக்கட்டு நடத்த ஆர்வம் காட்டிய கிழக்கு ஆளுநர் மயிலத்தமடு பிரச்சினையைத் தீர்க்க ஆர்வம் காட்டவில்லையே?**

ஜல்லிக்கட்டு காளை மாட்டுடன் மோதுவது அதற்கான மாடுகள் ஒன்று கூடி எதிர்ப்புத் தெரிவிக்காது.
ஆனால் மயிலத்தமடு பிரச்சினை தமிழர் பிரச்சினை அதை அவர் ஏன் கையாள வேண்டும்.அவருக்கு அரசை ஆதரித்து செல்ல ஒரு பாதை வேண்டும்.
அந்தப் பாதையை ஜல்லிக்கட்டு காளையில் ஏறி சவாரி செய்யப்பார்க்கிறார்.
ஆதலால் இது விடயத்தில் நாம் அமைதியாய் இருப்பதே மேலானது.

**கயழகன் — வேலணை**

**2022 இல் விண்ணப்பித்தவர்களுக்குக்கூட இன்னும் தேசிய அடையாள அட்டை கிடைக்கவில்லையே?**

தம்பிக்கு விடயமே தெரியாது போல அட, அடையாள அட்டை அச்சிடுபவர்களுக்கு நாட்டில் தட்டுப்பாடாம் அது தான் விடயம்.
எமது நாடு பிச்சைப்பாத்திரம் ஏந்திய நாடு. இங்கு என்ன உற்பத்திக்கும் இடமே இல்லை. எல்லாத்துக்கும் சீனாவை நம்பியிருக்கும் நிலை. சீனா நினைத்தால் தான் இங்கு தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் என்பன வழங்கலாம் என்ற அளவில் இறக்குமதியை நம்பித் தவம் கிடக்கிறது இலங்கை. அது அவ்வளவு நல்லவிடயமல்ல. சாதாரண குண்டூசியைக் கூட இறக்குமதி செய்வதில் ஆர்வம் காட்டினால் நாடு எப்படி முன்னோக்கிச் செல்லும்.

**சிவயோகன் — புளியங்குளம்**

**நான் இறந்தாலும் இவன் இறக்க வில்லை என்பதை இவ்வுலகம் நினைக்க வேண்டும் என்றால் யார் வாழ்வை பின்பற்ற வேண்டும்.**

தன் உயிரை துச்சம் என மதித்து தன் இனத்துக்காய் உயிரை மாய்க்கும் உத்தமன்.
தன் வீடு இடித்தழிக்கப்பட்டாலும் ஏழைத் தமிழ் இனத்தின் வீடு இடிபடக் கூடாது என்று திடம் பூண்டவன்.
தான் முள்மேல் படுத்தாலும் தன் இனம் நிம்மதியாய் புற்பாயில் படுக்க வேண்டும் என்ற சிந்தனை கொண்டவன்.
தான் பட்டினியாய் இருந்தாலும் தன் இனம் கஞ்சியேனும் குடித்து உயிர் வாழ வேண்டும் எனும் உள்ளம் கொண்டவன்.
தன் கையில் உள்ள ஆயுதத்தை, தான் மடியும் போது தோழனிடம் கொடுத்து எதிரியை துவம்சம் செய் என்று உறுதி பூண்டவன்.
எதிரியின் கையில் அகப்படும் சந்தர்ப்பம் வந்தால் நஞ்சை அருந்தித் தன்னைத் தாயக மண்ணுக்கு வித்தாக்கியவன்.
அவனைப் பற்றி இப்படியே சொல்லிக் கொண்டு போகலாம்.
அவன் தான் எம் அண்ணன்.அன்புத் தலைவன்.

**மதுவன் — மீசாலை**

**ஆண் குரங்குகளுக்கு கருத்தடை சிகிச்சை செய்யப்போவதாக ஒரு தகவல் வருகிறதே?**

இந்தக் குரங்குப் புத்தி எங்கிருந்துதான் வருகிறதோ தெரியவில்லை.
வீதிகளில் கட்டாக்காலியாகத் திரியும் நாய்களினால் ஒரு நாளைக்கு எத்தனை விபத்துக்கள் எத்தனை உயிரிழப்புக்கள்.முதலில் வீதிகளில் கட்டாக் காலியாகத்திரிந்து விபத்துக்களை ஏற்படுத்தும் நாய்களுக்கு ஏதும் நடவடிக்கை எடுங்கள்.
அதன்பின் குரங்குகளுக்கு சிகிச்சை அளிப்பது பற்றி சிந்திக்கலாம்.
செய்யவேண்டியதை செய்ய வேண்டிய நேரத்தில் செய்யாமல் எதையோ செய்வது தானே எமது தலைவர்களின் டிசைன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

படம் : மன்னவன் வந்தானடி
இசை : M.S.விஸ்வநாதன்
பாடியவர் : T.M.சௌந்தரராஜன்
வரிகள் : வாலி



நான் நாட்டத் திருத்தப் போறேன்
அந்தக் கோட்டையைப் பிடிக்கப் போறேன்

நான் நாட்டத் திருத்தப் போறேன்
அந்தக் கோட்டையைப் பிடிக்கப் போறேன்
அந்தக் கோட்டையைப் பிடிக்கப் போறேன்
கூட்டம் போட்டு கொடி புடிச்சு
ஆட்டம் போட்டு அதிர வச்சுக்

ஆஹா கூட்டம் போட்டு கொடி புடிச்சு
ஆட்டம் போட்டு அதிர வச்சுக்
கொள்கையிலே வெல்லப் போறேன்
நாட்டிலுள்ள பெருந்தலைவர்
காட்டி வச்சப் பாதையிலே

நாட்டிலுள்ள பெருந்தலைவர்
காட்டி வச்சப் பாதையிலே
நாட்டையே ஆளப் போறேன்

நான் நாட்டத் திருத்தப் போறேன்..

ஊரை ஏமாற்றும் உல்லாசக்காரன்
வேஷத்தைக் கலைக்கப்போறேன்
ஊரை ஏமாற்றும் உல்லாசக்காரன்
வேஷத்தைக் கலைக்கப்போறேன்
உள்ளே ஒண்ணாக வெளியே ஒண்ணாகப்
பேசாமே பண்ணப் போறேன்
தினம் பாடுபட்டவன் பட்டினி உள்ளவன்
பாவப்பட்டவன் பள்ளத்தில் உள்ளவன்
வாழ்வை முன்னேற்றப் போறேன்
மக்கள் வாழ்வை முன்னேற்றப் போறேன்

நான் நாட்டத் திருத்தப் போறேன்..

ஆணி அச்சாணி இல்லாத தேரை
எல்லோர்க்கும் காட்டப் போறேன்
ஆணி அச்சாணி இல்லாத தேரை
எல்லோர்க்கும் காட்டப் போறேன்
அச்சம் பண்பாடு இல்லாத ஆளை
என்னான்னு கேக்கப் போறேன்
இந்த நாட்டு மக்களின் நல்லது கெட்டது
நாட்டிலுள்ள என் கண்ணில் பட்டது
நல்ல வழிக் காட்டப்போறேன்
ரொம்ப நல்ல வழிக் காட்டப்போறேன்

நான் நாட்டத் திருத்தப் போறேன்...

மேடு பள்ளங்கள் இல்லாமல் ஊரை
ஒண்ணாகப் பண்ணப்போறேன்
மேடு பள்ளங்கள் இல்லாமல் ஊரை
ஒண்ணாகப் பண்ணப்போறேன்
வேற்று நாட்டோர்கள் என் வீட்டுச் சோற்றை
திண்ணாம காக்கப் போறேன்
அட காலம் வந்தது கத்தியைத் தீட்டு
கத்தியைப் போல புத்தியைத் தீட்டு
வெற்றியை நான் வாங்கித் தாரேன்
வெற்றியை நான் வாங்கித் தாரேன்

நான் நாட்டத் திருத்தப் போறேன்...

# அயோத்தி ராமர் கோயில்: ரூ.25 லட்சத்தில் மணி; 100 கிலோ தங்கத்தில் 42 கதவுகள்!

அயோத்தியில் கட்டப்பட்டுள்ள ராமர் கோவில் கும்பாபிஷேக விழா நாளை இந்திய பிரதமர் நரேந்திர மோடி தலைமை யில் நடைபெறுகிறது. விழாவில் பங்கேற்க நாடு முழுவதும் ஆளும் கட்சிப் பிரமுகர்கள் மற்றும் முக்கியமானவர்களுக்கு அழைப்பிதழ் கொடுக்கப்பட்டு வருகிறது.

மற்றொரு புறம் கோயில் கட்டுமானப் பணியின் இறுதிக்கட்டப்பணிகளும் முழு வேகத்தில் நடந்து வருகின்றன. கருவறையின் பிரதான வாயிற் கதவு பொருத்தப்பட்டுள்ளது. இக்கதவு 12 அடி உயரத்தில் 8 அடி அகலத்தில் தேக்கு மரத்தில் செய்யப்பட்டு தங்கத் தகடுகளால் போர்த்தப்பட்டுள்ளது. மேலும் 13 தங்கக் கதவுகள் பொருத்தப்பட இருக்கின்றன. தங்கக் கதவுகள் அனைத்தும் கருவறை இருக்கும், மேற்தளத்தில் பொருத்தப்பட இருக்கிறது என்று கோவில் நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

கோவில் முழுக்க மொத்தம் 46 கதவுகள் பொருத்தப்பட இருக்கின்றன. இதில் 42 கதவுகள் 100 கிலோ தங்கத்தில் செய்யப்பட்டுள்ளது. கதவுகள் அனைத்தும் தங்கத் தகடுகளால் போர்த்தப்பட்டுள்ளது. கோவில்களுக்கான கதவுகள் செய்ய தமிழகத்தில் இருந்து அத்துறையில் விசேட நிபுனர்கள் அயோத்திக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். தமிழக ஊழியர்கள் அயோத்தியில் தற்காலிக முகாம் அமைத்து, கோவிலுக்கான கதவை உருவாக்கி வருகின்றனர்.

கோவிலில் பிரதிஷ்டை செய்யப்படும் ராமர் சிலை கர்நாடகாவில் செய்யப்பட்டது. அருகில் உள்ள தமிழர்களின் கைவண்ணத்தில் கோவில் கதவுகள் உருவாகிறது. கோவில் சுவர்கள் மற்றும் தூண்களில் ராமாயாண நிகழ்வுகள் தத்ரூபமாக செதுக்கப்பட்டுள்ளது. 161 அடியில் மூன்று அடுக்குகளாகக் கட்டப்பட்டுள்ள ராமர் கோவிலில் 392 தூண்கள் அமைக்கப்பட்டுள்ளது.

இரும்பு இல்லாமல் கற்களால் கட்டப்பட்டுள்ள ராமர் கோவிலில் ஐந்து மண்டபங்கள் இடம் பெற்றுள்ளது. கோயில் நுழைவு வாயிலில் யானைகள், சிங்கம், ஹனுமான், கருடன் சிலைகள் அமைக்கப்பட்டுள்ளது. 22 ஆம் திகதி அயோத்தியில் அரசு விடுமுறை விடப்பட்டது. அன்றைய தினம் மது விற்பனைக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ராமர் கோயிலில் பொருத்துவதற்காக 2,400 கிலோ எடையில் ராட்சத மணி தயாரிக்கப்பட்டுள்ளது. 8 உலோகங்களைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இந்த மணி உத்தரப்பிரதேசத்தின் எட்டா மாவட்டத்தில் உள்ள சலசர் என்ற இடத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது. இது 6 அடி நீளம் கொண்டது ஆகும். 30 ஊழியர்கள் சேர்ந்து ரூ.25 லட்சத்தில் இதனைத் தயாரித்துள்ளனர். ரயில் மூலம் அந்த மணி அயோத்திக்கு எடுத்து வரப்பட்டுள்ளது. இதுதான் நாட்டிலேயே மிகப்பெரிய மணியாகப் பார்க்கப்படுகிறது. இதில் மணியடித்தால் 2 கி.மீ தூரத்திற்குக் கேட்கும் என சொல்லப்படுகிறது.



## ராமருக்கு 7,000 கிலோ அல்வா

மகாராஷ்டிரா மாநிலம் நாக்பூரைச் சேர்ந்த பிரபல சமையல் கலைஞர் விஷ்ணு மனோகர், அயோத்தி ராமர் கோயிலுக்கு பிரசாதமாக 7,000 கிலோ அல்வா தயாரிக்க இருக்கிறார். இது தொடர்பாக விஷ்னு மனோகர் கூறுகையில், "7,000 கிலோ அல்வா தயாரிக்க 1,400 கிலோ எடையுள்ள பாத்திரம் தயார் நிலையில் இருக்கிறது.

அது 12,000 லீற்றர் கொள்ளளவு கொண்டது. 7,000 கிலோ அல்வா தயாரிக்க 900 கிலோ ரவை 1,000 கிலோ நெய், 1,000 கிலோ சர்க்கரை, 2,000 லீற்றர் பால், 2,500 லீற்றர் தண்ணீர், 300 கிலோ உலர்ந்த பழங்கள் பயன்படுத்தப்படும். இந்தப் பிரசாதம் ராமருக்குப் படைக்கப்பட்ட பிறகு 1.5 லட்சம் பக்தர்களுக்கு விநியோகம் செய்யப்படும்" என்றார்.

### 30 ஆண்டுக்கு பிறகு மௌன விரதத்தைக் கலைக்கும் பெண்

அயோத்தியில் ராமர் கோயில் கட்டிய பிறகுதான் மௌன விரதத்தைக் கலைப்பேன் என்று கூறி ஜார்க்கண்ட் பெண் ஒருவர் மௌன விரதம் இருந்து வருகிறார். தன்பாத் மாவட்டத்தில் வசிக்கும் சரஸ்வதி தேவி என்ற பெண் இந்த மௌன விரதத்தை மேற்கொண்டு வருகிறார். 30 ஆண்டுகளாக சரஸ்வதி பெரும்பாலான நாட்களை புனித பயணத்தில் கழித்தார். 30 ஆண்டுகளும் அவர் யாருடன் பேசுவதாக இருந்தாலும் சைகை மொழியில்தான் பேசுவார் என்று சரஸ்வதி மகன் ஹரிராம் தெரிவித்துள்ளார்.

ராமர் கோயில் கட்டி முடிக்கப்பட்டுத் திறக்கப்பட இருப்பது குறித்து தெரிவித்த போது எனது தாயார் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். 22 ஆம் திகதி ராமரைப் பார்த்த பிறகுதான் பேச இருக்கிறார். 30 ஆண்டுக்குப் பிறகு அவரின் குரலைக் கேட்க ஆவலாக இருக்கிறோம்" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவியின் பிறந்தநாளை மறந்தால்

**வெளிநாடுகளுக்குப் பயணம் புறப்படுவதற்கு முன் அந்தந்த நாடுகளைப் பற்றித் தெரிந்து கொள்வதுடன் அங்கே பின்பற்றப்படுகிற விதிகளையும் அறிந்துகொள்வது அவசியம். ஏனென்றால், இங்கே நாம் செய்யும் சாதாரண விடயங்கள்கூட சில நாடுகளில் கடுமையான சட்டங்கள் விதித்துத் தடை செய்யப்பட்டுள்ளன. அவ்வாறு ஸ்ட்ரிக்ட் ரூல்ஸைப் பின்பற்றும் சில நாடுகள் இங்கே...**

### ஜப்பானில் சேற்றைத் தெறிக்கவிடலாமா?

ஜப்பானில் ஒரு பொறுப்பான ஓட்டுநராக இருக்க, சாலை விதிகளைப் பின்பற்றுவது மிகவும் முக்கியம். மழை நாளில் பாதசாரிகளின் மீது தண்ணீர் அல்லது சேற்றைத் தெறிப்பது சமூக மரியாதையின்மை மட்டுமல்லாமல் கடுமையான விதிமீறலும் ஆகும். இதைச் செய்பவர்களுக்கு 7,000 யென் வரை அபராதம் விதிக்கப்படும். இந்தச் சட்டம் பாதசாரிகளின் பாதுகாப்பு, மரியாதையுடன் சாலைகளின் சுத்தத்தையும் உறுதி செய்கிறது.

### மனைவியின் பிறந்தநாளை மறக்கலாமா?

மனைவியின் பிறந்தநாளை மறப்பது சட்டவிரோதமானது என தீவு நாடான சமோவா அறிவித்துள்ளது. இதைப் பற்றிக் காவற்றுறையில் புகார் அளிக்க மனைவிக்கு முழு உரிமை உண்டு. 2021இல் பிறப்பிக்கப்பட்ட இந்தச் சட்டத்தை மீறினால் சிறைத்தண்டனையும் கிடைக்கும். வாழ்க்கைத் துணையின் பிறந்தநாளை மறப்பது அலட்சியத்தையும் மரியாதையின்மையையும் காட்டுவதாக இங்கே கருதப்படுகிறது. இருப்பினும், இந்தச் சட்டம் பலரால் விமர்சிக்கப்படுகிறது.



### சிங்கப்பூரில் சூயிங்கம் சாப்பிடலாமா?

குப்பையை அகற்றுவது கடினம் மற்றும் சூழலுக்குக் கேடு விளைவிக்கும் என்பதால் 1992அம் ஆண்டில் சூயிங்கம் விற்பனை மற்றும் பயன்பாட்டுக்கு சிங்கப்பூரில் தடை விதிக்கப்பட்டது. மீறினால் 1,00,000 அமெரிக்க டொலர் அபராதத்துடன் இரண்டு ஆண்டுகள் வரை சிறைத்தண்டனையும் அனுபவிக்கவேண்டும். கடுமையான இந்தச் சட்டம், 2004 ஆம் ஆண்டில் தளர்த்தப்பட்டது. மருத்துவ நோக்கங்களுக்காக சில வகை சூயிங்கங்களை மட்டும் மருத்துவரின் பரிந்துரையின் பேரில் சாப்பிடலாம்.

### வெனிஸில் புறாக்களுக்கு இரையிடலாமா?

வெனிஸ் செல்லும்போது அங்கே உள்ள முக்கிய சுற்றுலாத் தலங்களில் அதிக எண்ணிக்கையிலான புறாக்களை நீங்கள் பார்க்கலாம். உடனே புறாக்களிடம் அன்பு காட்டுவதற்காக அவற்றுக்கு இரையிட்டுவிடாதீர்கள். அதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. நகரத்தை புறாக்கள் அசுத்தமாக்கு வதுடன் நோய்களையும் பரப்புகின்றன. அவற்றால் நினைவுச் சின்னங்களும் சேதமடைகின்றன என்பதால் 2008இல் இந்த உத்தரவு போடப்பட்டது. மீறினால் 700 யூரோ தண்டம் வசூலிக்கப்படும்.



# தவிர்க்க முடியாத கம்யூட்டர் பயன்பாடு; வறண்டுபோகும் கண்கள்

# மீள வழிகள் உண்டா?

ஆன்லைன் வகுப்புகளை கவனிக்க வேண்டிய பிள்ளைகள், ஐடி போன்ற துறைகளில் எந்நேரமும் கம்யூட்டர், லப்டப் உபயோகிப்பவர்களுக்கெல்லாம் "கம்யூட்டர் விஷன் சிண்ட்ரோம்" (Computer Vision Syndrome ) என்ற பிரச்சினை பாதிப்பது அதிகரித்து வருகிறது.

தொடர்ந்து பல மணி நேரத்துக்கு கம்யூட்டர், மொபைல் திரைகளைப் பார்த்துக்கொண்டிருப்பது கண்களை பாதிக்கும். கண்களில் எரிச்சல், சிவந்துபோவது, கண்களிலிருந்து நீர் வடிதல், தலைவலி, கண்கள் வறண்டு போவது போன்ற பிரச்சினைகளுடன் கண் மருத்துவர்களைச் சந்திக்க இன்று நிறைய பேர் வருகிறார்கள்.

ஆன்லைன் வகுப்புகளை கூடியவரையில் பெரிய திரை உள்ள கம்யூட்டரில் அட்டெண்ட் செய்வது மாணவர்களுக்கு நல்லது. பெரிய திரை உள்ள கம்யூட்டருக்கு வாய்ப்பில்லாத பட்சத்தில் லப்டப் உபயோகிக்கலாம். எக்காரணம் கொண்டும் மொபைல் போன் மட்டும் வேண்டாம். மொபைலில் பார்க்கும்போது கண்களுக்கு அது அதிக சிரமத்தைத் கொடுக்கும். கண்கள் களைப்படையும். அதனால் தலைவலி வரும். இந்தப் பிரச்சினைகளைத் தவிர்க்க, கம்யூட்டர் பயன்படுத்தும்போது சில விடங்களை நினைவில் கொள்ள வேண்டும்.

உங்கள் கண்களுக்கும் கம்யூட்டர் திரைக்குமான இடைவெளி குறைந்தது 25 இன்ச்சாவது இருக்க வேண்டும். உங்கள் பார்வையிலிருந்து கம்யூட்டர் திரையானது சற்றே கீழிறங்கியபடி இருக்க வேண்டும். சாதாரணமாக ஒரு நிமிடத்துக்கு 10 முதல் 15 முறை நாம் கண்களை இமைக்கிறோம். ஆனால் கம்யூட்டர் திரையைப் பார்க்கும்போது அதை மறந்துவிடுகிறோம்.

புத்தகங்களை வாசிக்கும்போது நமக்கு கண்களில் சிரமம் ஏற்படுவதில்லை. அதுவே கம்யூட்டர் உபயோகிக்கும்போது சிரமமாக உணர்கிறோம். அதற்குக் காரணம் கம்யூட்டர் திரைகளில் உள்ள பிக்செல்களே. அவற்றைப் பார்ப்பதற்காக நாம் கண்களுக்கு கூடுதல் சிரமத்தைக் கொடுக்கிறோம். அதனால்தான் கண் எரிச்சல், வறட்சி என எல்லா பிரச்சினைகளும் வருகின்றன. இவற்றைத் தவிர்க்க, கண்களை அடிக்கடி இமைக்க மறக்கக் கூடாது.

கம்யூட்டர் பயன்படுத்தும்போது வசதியாக உட்கார்ந்துகொள்ள வேண்டும். வெளிச்சமானது நேரடியாக கம்யூட்டரில் படாமல், உங்களுக்குப் பின்னாலிருந்து வரும்படி பார்த்துக்கொள்ளவும். கம்யூட்டர் உபயோகிக்கும்போது அதில் வெளியிலிருந்து வெளிச்சம் விழாதபடி வைத்துக் கொள்ளவும்.


20:20:20 விதி பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஒவ்வொரு 20 நிமிடங்கள் கம்யூட்டரை பயன்படுத்தியதும் 20 அடிகள் தொலைவிலுள்ள காட்சிகளை 20 நொடிகளுக்குப் பார்க்க வேண்டும் என்பதே இந்த விதி.

கம்யூட்டர் பயன்படுத்தும்போது குழந்தைகளுக்குக் கண்களில் ஏதேனும் பிரச்சினைகள் இருப்பது தெரிந்தால் பார்வை தொடர்பான பாதிப்புகள் உள்ளனவா என மருத்துவரிடம் செக் செய்யவும். பார்வை பாதிப்புகள் இருந்தால் அதற்கான சிகிச்சைகளை மேற்கொள்ளவும். கண்ணாடி தேவை என்றால் அணியவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்

## தன்வினை



உடைந்து போன இனம்
நிகழ்ந்து கொண்டிருக்கும்
சங்கதிகள் மறுக்கப்படும் உரிமைகள்
நீதி இல்லாமல் நீண்டு செல்லும்
அரசியல் இது பற்றி
நீயும் நானும்
பேசிக் கொண்டிருக்கையில்
நம் நிலங்களில் அவசர அவசரமாய்
இடம் மாறும் எல்லைகள்
ஆங்காங்கே விகாரைகளின்
விஸ்வரூபமாய் ஒரு
இனத்திற்கு மட்டுமான
கொடுமைகள் தொடர்கின்றனவே
வெந்து வெதும்பும் வேதனைகளின்
வெளிப்பாடு வெளிச்சத்தை தராதோ

தேன் நிலா.

## மலையரசி நீயே



மலையகம் ஈன்ற மலையரசி நீயே
மனங்களை வென்ற தமிழ் அரசி நீயே
மறுமலர்ச்சியின் மகா அரசி நீயே
மறக்க முடியாத இளவரசி நீயே


கலைத்தாயின் எழிலரசி நீயே
கரைகடந்த பேரரசி நீயே
பள்ளியிலே தனியரசி நீயே
பார் போற்றும் பவரசி நீயே

கனிவான் கலையரசி நீயே
கண்ணீர்த்துளிகள் பேரரசி நீயே
காலம் தந்த மொழியரசி நீயே
காண்போரை கலங்க வைத்த
நயப் பணியின் நவ அரசி நீயே

உலகத்தின் பார்வையிலே நிலவரசி நீயே
ஊர் மக்கள் உணர்வினிலே பெண்ணரசி நீயே
உலகத்தின் சுழற்சியிலே உருவான
இரு நூற்றாண்டின் மலையரசி நீயே

பி. துரையரசன்,
ஒட்டுசுட்டான்.

## இயற்கையின் விந்தை



பனித்துளிகளினைக் கொண்ட மலர்கள்
வாசனையுடன் புன்னகைத்திட
சிறகுகளை அடித்த வண்ணம் பட்சிகள்
இன்னிசைக் கீதங்கள் இசைத்திட
குளிர்ச்சியில் கூம்பிய ஆம்பல்
ஆயிரம் இதழ்களை விரித்திட
ககனத்திலே உடு உடுபதிகளிடம்
ஒளிச் சமர் செய்து
வைகறையிலே வையகத்தின் கிழக்கிலே
செங்கோலினை நிலைநாட்டிட
எழில் கொண்ட வர்ணங்கள் ஏழுடன்
பகலவன் உதயமாகிட
பனிக்கட்டிகள் நீர்த்துளிகளாக உருகி
நீர்வீழ்ச்சியாக கடலை சென்றடைந்து
அலைகளாகிய கைகளினூ
செங்கதிரோனை வரவழைத்தது

தே. அபிநயா,

## மௌனத்தின் தேடல்-699



## காளையும் காளையவனும்



திமிறி வந்த காளையின்
திமிலைப் பிடித்த தீரன்
ஜல்லிக் கட்டுக் காளையின்
காலைக் கட்டிய வீரன்
மல்லுக் கட்டும் போரில்
வெற்றி வாகை சூடுவான்

பி.யதுர்சன், கொக்குவில் இந்துக்கல்லூரி.

## அன்றும் இன்றும்



ஏர்ப்பின் உலகம்
இருந்த போது
எருதுக்கு பொங்கலிட்டு
பூசை செய்தார்
ஏற்புக்கு உலகம்
வந்த போது
எருதுவை கசாப்புக்கு
விலை பேசி விற்றார்

பி.மதுஷ்சன், தையிட்டி

## அகமும் புறமும்

அடங்க மறு என்று நாளும் பொழுதும்
பாடம் படிப்பித்து வளர்த்த காளைகள்
சீறி வரும் காளைகளை அடக்குவது
வீரத்தைக் காட்டுமென்று காளையரும்
ஜல்லிக்கட்டு போட்டிக்களத்தில்
மல்லுக்கட்டி உதிரம் சிந்துவதும்
உயிர் வதைகளும் தேவையாயென்று
உரத்துக் குரல்களும் ஒலித்தாலும் கூட
பாரம்பரியத்தை தொடர்ந்தும் பிரியமுடன்
பாதுகாப்பதும் தலையாய கடமை என்று
பெரும்பாலோர் கையை உயர்த்துகின்றனர்.

க. நாகராசா, நுணாவில்.

## ஜல்லிக்கட்டு

சீற்றமுடன் சீறிப் பாய்ந்து வந்த முரட்டுக் காளையதை
அசாத்தியமாய் நேருக்குநேர் மோதி நின்று
நிலைகுலையச் செய்ததன்ன மடக்கிப் பிடித்து ஏறி
தனில் ஏறி நின்று ஆடாது அசையாது
தன் கட்டுக்குள் வைத்திருக்கும்
இவனன்றே அசகாய
சூர தீர ஜல்லிக்கட்டுக் காளை



சி.மகாலட்சுமி,
கொக்குவில்.

## வீரக்காளை

ஜல்லிக்கட்டுக் காளையுடன்
மல்லுக்கட்டும் காளையிவன்
காளையின் திமிலில் கைகோர்த்து
தொங்கி நிற்கும் நிலையைப் பாரீர்
காளை வீரன் வீரக் காளையுடன் மோதி
ஜல்லிக்கட்டில் வென்று கம்பீரமாக
வீரக் காளை நான் தான் என்று
கூவிக் குரலொன்று கொடுத்து
வாகை சூட வாழ்த்துவோம்

ஆ.செல்வி, திருநாவலூர்.

## மாற்றம்



கலாசார மாற்றங்கள்
கண் மறைத்துப் போனாலும்
பலகலையும் பண்பாடும்
மீண்டு வந்து சேர்கையிலே
நிலையான சந்ததிகள்
நிரந்தரமாய் ஆகுமென்று
நிம்மதியால் கடக்கையிலே
காளை அதை அடக்கி தமிழன்
காட்டுகிறான் எம் பழைமை வீரத்தை
விளையாட்டைப் பாரீர்

யாழ் வாகீஷ்

## மௌனத்தின் தேடல்- 700



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் புறா

"நான் கொல்லவில்லை, அமீர் கொன்றான்."

"அமீர் உங்களைச் சேர்ந்தவர். அவர் கொன்றாலும் நீங்கள் கொன்ற மாதிரிதான் இங்குள்ளவர்களுக்கு. தவிர வில்வலனைப் பலர் முன்பு அவமானப் படுத்தியிருக்கிறீர்கள். இந்த இரண்டு செய்கைகளாலும் பூர்வகுடிகள் வெகுண்டிருக்கிறார்கள். உங்களை அவர்களுக் அளித்துவிட்டால் பதக்குகள் சாந்தி அடைந்துவிடுவார்கள். அவர்கள் ஒத்துழைப்பு என் தந்தைக்கு இனி மேலும் இருக்கும்."

"நான் மணம் செய்து கொண்டால்?"

"அப்பொழுது பதக்குகளை நிலத்திலும் சூளுக்களைக் கடலிலும் எதிர்க்கக் கூடிய திறமை மிக்க படைத்தலைவர் கிடைக்கிறார் தந்தைக்கு. அப்பொழுதும் அவருக்கு லாபம்தான். இப்படி இரண்டு வழிகளிலும் உங்களைக் கட்டவே இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறார் தந்தை. ஆகவே..."

"ஆகவே?"

மஞ்சழகி மீண்டும் முகத்தைக் கவிழ்த்துக் கொண்டாள். பிறகு மெல்லச் சொன்னாள், "இந்த அக்ஷய முனையை விட்டுப் போய் விடுங்கள் இளையபல்லவரே" என்று.

இளையபல்லவன் சற்று யோசித்துவிட்டுக் கேட்டான், "மஞ்சளழகி என்னைக் கொல்வது அத்தனை சுலபமென்று நினைக்கிறாயா?" என்று.

"ஏன் சுலபமில்லாமலென்ன?"

"எனக்குப் பின்னால் அகூதா இருக்கிறாரென்பதை மறந்துவிட்டாயா? அவரிடமுள்ள பயத்தாலேயே உன் தந்தை என்னை தன் மாளிகையை விட்டு உயிருடன் வெளியில் அனுப்பினார் என்பதுதான் உனக்கு நினைப்பில்லையா?" என்றான் இளையபல்லவன்.

"எதையும் நான் மறக்கவில்லை இளையபல்லவரே இந்த ஒரு விடயத்தில் அகூதாவும் எதுவும் செய்ய முடியாது" என்றாள் அவள்.

"ஏன்?"

"அகூதாவும் இந்தப் பழக்க வழங்கங்களுக்கும், சட்டதிட்டங்களுக்கும் கட்டுப்பட்டவன். அகூதா எதையும் மன்னிப்பானாம். பெண்களையும் ஆண்களையும் கொல்வதைக்கூட. ஆனால் ஒரு பெண் மட்டும் கெடுக்கப்பட்டால் கெடுத்தவன் யாராயிருந்தாலும் அவன் மன்னிப்பதில்லையாம்."

இதைக்கேட்ட இளையபல்லவன் வியப்பின் எல்லையை எய்தினான். ஒருவருட காலமாக அகூதாவைப் பற்றித் தான் அறியாத ஒரு புது தர்மத்தை மஞ்சளழகி எடுத்துச் சொன்னது அவனுக்குப் பெரிய ஆச்சரியத்தை முதலில் விளைவித்தாலும் பிறகு உண்மையும் மெல்ல மலர்ந்து அவன் இயத்தில். எந்த இடம் சூறையாடும் போது பெண்களை மட்டும் தொடக்கூடாதென அகூதா இட்ட உத்தரவு அவனுக்கு அப்பொழுதுதான் நினைவுக்கு வந்தது.




காலத்தின் பதிவு 93

## உடைந்த கவசம்

கொள்கைக்காரன் இத்தனை வினோத உத்தரவை இடுகிறானே என்று அந்தச் சமயங்களில் சாதாரணமாகத் தோன்றியது இளையபல்லவனுக்கு. இப்பொழுது அதை நினைக்க நினைக்க அகூதாவின் புரிபடாத பல செயல்கள் அவனுக்குப் புரியலாயின. அகூதாவின் வாழ்க்கையில் பெண் சம்பந்தமான பெரும் விபரீதம் ஏற்பட்டிருக்கவேண்டுமென அவன் எண்ணினான். அந்த எண்ணங்களுடன் அகூதாவின் குணத்தின் பலன் தன் நிலையை அக்ஷய முனையில் எத்தனை தூரம் பாதிக்கிறது என்பதை நினைத்துச் சற்று சிந்தை கலங்கவும் செய்தான். "அகூதாவிடம் உள்ள பயம் ஒன்றுதான் எனக்கு இங்கு கவசம். அதை உடைத்துவிட்டான் பலவர்மன். இனி என் உயிர் அவன் கையிலிருக்கிறது. என்று எண்ணமிட்ட இளைய பல்லவன் திடீரென ஒரு முடிவுக்கு வந்து. "வா! மஞ்சளழகி!" என்று அவளை அழைத்தான்.


அவள் எழுந்து நின்றாள். அவள் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டே கொள்ளையர் கூட்டமாக நின்றிருந்த இடத்தை நோக்கி நடந்தான் இளைய பல்லவன். அவன் முகத்தில் உறுதி மண்டிக் கிடந்தது. அந்த உறுதிக்குக் காரணம் அவளுக்குப் புரியவில்லை. உடைந்த கவசம் அளித்த உறுதி அது என்பது அவளுக்கு விளங்கவில்லை.

(தொடரும்...)

---

# நான் வைரமுத்து பேசுகிறேன்... 39

# பாரதியின் பின்புலங்கள்



பேராசிரியர் அ.சீநிவாசராகவன் பாரதியைப் பற்றி எழுதும்போது குறிப்பிடுவார்.

**"ஓர் உணர்ச்சியை அல்லது நிலையைக் குறியீடாகப் பயன்படுத்தும் பொழுதே அது கரைந்து எதை உணர்த்த அது எழுந்ததோ அதுவாகவே ஆகிவிடும் அருமைப்பாட்டை மிக உயர்ந்த மெய்ப் பொருள் கவிதையிலே மட்டும் காணமுடியும். குறியீடும் குறிக்கோளும் ஒன்றாகச் சங்கமமாகும் இந்த விந்தையைப் பாரதியாரின் பக்திப் பாடல்களிலே காணலாம்."**

(ஒரு நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை: பக்கம் 89)

இந்தக் குறியீடும் குறிக்கோளும் சங்கமமாகும் விந்தைக்குப் பாரதியின் பல பாடல்களை எடுத்துக் காட்டலாம்.

**"கண்கள் உறங்கவொரு காரணமுண்டோ?**
**கண்ணனை இன்றிரவு காண்பதன் முன்னே!**
**பெண்கள் எல்லோருமவர் வீடு சென்றிட்டார்**
**பிரிய மிகுந்த கண்ணன் காத்திருக் கின்றான்**
**வெண்கல வாணிகரின் வீதி முனையில்**
**வேலிப் புறத்திலெனைக் காணடி என்றான்**
**கண்கள் உறங்கலெனும் காரமுண்டோ**
**கண்ணனைக் கையிரண்டும் கட்ட லின்றியே."**

என்று பாங்கியுரை அனுப்பிவிட்டுத் தனியேயிருந்த அவள் தன் நெஞ்சோடு கிளத்துகிற பாட்டில், 'பிரிவிரக்கம்' என்ற குறியீடு 'இறைநாட்டம்' என்ற குறிக்கோளோடு சங்கமம் ஆவதனைச் சந்திக்க முடிகிறது.

**"ஆசை முகமறந்து போச்சே– இதை**
**ஆரிடம் சொல்லவேடி தோழி**
**நேசம் மறக்கவில்லை நெஞ்சம் –எனில்**
**நினைவு முகம் மறக்கலாமோ?"**

என்ற தன்னிரக்கமான வினாவைத் தனக்குள் கேட்டு, தனக்குத்தானே விடை தருவதற்குத் தோழியைத் துணைக்கழைத்து.

**"தேனை மறந்திருக்கும் வண்டும்– ஒளிச்**
**சிறப்பை மறந்துவிட்ட பூவும்**
**வானை மறந்திருக்கும் பயிரும் – இந்த**
**வைய முழுதுமில்லை தோழி!"**

என்று ஏக்கப் பெருமூச்சை இழைய விடுகிறபோதும், பாவனை, பாவனையாக அல்லாமல் மெய்யுணர்ச்சிபோலவே முகங்காட்டி எழுகிறது. இப்படி... இப்படி... பாரதியின் எழுத்துக்களில் எந்தப் பிரதே சத்தை அலசிப் பார்த்தாலும் அவற்றுக்கெல்லாம் ஆழ்ந்த மரபு மூலம் உண்டென்பதை அறியலாம்.

விடுதலைப் போராட்டம் பாடிய ஒரு யுகக் கவிஞன் பக்தியைப் பாடிக் கிடந்திருக்கிறானே என்ற கண்ணோட்டத்தில் அவனைப் பார்ப்பதை விடவும், பக்தி இயக்கத்திலிருந்து விலக முடியாத ஒரு கவிஞன். விடுதலைப் போராட்டத்தில் விலங்கொடித்திருக்கிறானே என்ற கண்ணோட்டத்தில் பார்ப்பது தமிழுக்கும், பாரதிக்கும் தக்கதாகும்.

தனக்கு எட்டியமட்டுமிருந்த இலக்கிய மரபுகளை அவன் ஊன்றிக் கற்றான்.

காலத்தின் கட்டளையைப் புரிந்து கொண்டு அவன் புதுப்பித்தான். அவன் காலத்தை மறக்கவில்லை. எனவே காலமும் அவனை மறப்பதில்லை.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

382

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## நோயற்ற சுவாசம்


Tuberculosis எனப்படும் காச நோயானது, Mycobacterium tuberculosis எனப்படும் பக்டீரியாவினால் உடலில் ஏற்படுத்தப்படும் பாரியதொரு தொற்று நோயாகும். இது பிரதானமாக நுரையீரலைத் தாக்கி நோயை ஏற்படுத்தினாலும் அதற்கு மேலதிகமாக நிணநீர் கணுக்கள், நுரையீரலைச் சூழவுள்ள மென்சவ்வு, மூளை முண்ணான் போன்ற நரம்பு மண்டலத் தொகுதி, பிரதானமாக முதுகுப் பகுதியில் காணப்படும் என்பு, மூட்டுக்கள், பாலுறுப்புக்கள் போன்றவற்றிலும் இந்த நோயின் தாக்கம் அறியப்பட்டுள்ளது.

இது Extrapulmonary Tuberculosis எனப்படும். இதன் தொற்றுப்பரவலைப் பார்த்தால், அண்மையில் பரவிவரும் கொரோனா வைரஸ் போன்று ஒருவர் தும்மும் போது, இருமும் போது, கதைக்கும் போது அல்லது பலமாக சிரிக்கும் போது வெளிவருகின்ற நுண்ணிய சுவாசத் துகள்கள் வளிமண்டலத்திலே விடப்படுகின்றன.

இவை பல்லாயிரக்கணக்கான நோய் காவும் கிருமிகளைக் கொண்டிருக்கின்றன. இந்த கிருமிகள், இன்னொருவர் சுவாசிக்கும் போது அவரது நுரையீரலைச் சென்றடைந்து, அங்கிருந்து இரத்த ஓட்டத்தின் மூலம் வேறு அங்கங்களுக்குச் சென்றடைந்து நோயை ஏற்படுத்துகிறது.

அரசாங்க தகவலின் படி, இலங்கையில் சராசரியாக 62 - 66% காசநோயாளிகள் இருக்கின்றனர். National Programme for tuberculosis Control and chest diseases என்கின்ற அமைப்பும் உலக சுகாதார நிறுவனமும் இணைந்து அண்மையில் NTB strategy எனும் ஒரு செயற் றிட்டத்தை உருவாக்கியுள்ளனர். இதன் பிரதான நோக்கமாக 2035 ஆம் ஆண்டளவில் புதிதாக காசநோய் ஏற்படுபவர்களின் வீதத்தை 90-95% இனால் குறைத்தலாகும். இந்த நோக்கத்தை அடைய, காசநோய்க்கான அறிகுறிகள் தென்படுபவர்கள், தாமாகவே முன்வந்து காசநோய்க்கான பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும். இது ஒரு சமுதாய முக்கியத்துவம் வாய்ந்த நோயாக இருப்பதனால், காலம் தாழ்த்தி அறியப்பட்டால் இதன் பாதிப்புகள், தொற்றுடையவருக்கு மட்டுமல்லாது அவரைச் சூழவுள்ள அனைவரையும் இது பாதிக்கின்றது.

இதைவிட நோயாளியின் அங்கங்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களும் மிக அதிகமாக இருக்கும். பெரும்பாலானவர்களில் இந்த தொற்று மறை நிலையிலேயே காணப்படுகிறது. இவ்வாறு மறைநிலையில் காணப்படும் கிருமிகள், ஒருவருடைய நோய் எதிர்ப்பாற்றல் பலவீனமடையும் சந்தர்ப்பங்களில் நோயை ஏற்படுத்தி, நோய்க்கான குணங்குறிகளை வெளிக்காட்டும்.



நோய்க்கான அறிகுறிகளாக, நீண்ட காலம் மாறாத இருமல், இருமலுடன் சேர்ந்து சளி வெளியேறுதல், சளியுடன் இரத்தம் வெளியேறுதல், மார்புப் பகுதியில் வலி, பசியின்மை, உடல் எடை குறைதல், இரவில் அதிகமாக வியர்த்தல் போன்றவை காணப்படலாம். நுரையீரலுக்கு மேலதிகமாக வேறு அங்கங்கள் பாதிக்கப்பட்டிருந்தால், அதற்கான அறிகுறிகளும் தென்படலாம். உங்களுக்கு காசநோய் தொற்று உறுதிப்படுத்தப்பட்டால், அதற்கான மருத்துவ சிகிச்சையை நீங்கள் பெற்றுக் கொள்வது மிகவும் அவசியமாகும். இந்த சிகிச்சையானது உங்களுக்கு மட்டுமல்லாது உங்களைச் சுற்றி உள்ளவர்களுக்கும் நன்மை பயக்கும். இந்நோய்த் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்கள் குறைந்தது ஆறு மாத காலத்துக்கு மருந்துகளை எடுக்க வேண்டியது அவசியம். இம்மருந்துகளை மிகவும் நேர்த்தியாக உட்கொள்ள வேண்டும். ஏனெனில், ஒழுங்கற்ற விதத்தில் இம்மருந்துகளை எடுத்தால் காசநோய்க் கிருமிகள் விகாரமடைந்து, நோயின் வீரியம் அதிகரித்து உயிராபத்தை ஏற்படுத்தும் வாய்ப்புகள் அதிகமாக இருக்கும். அத்துடன் மருந்து எதிர்ப்புடன் விகாரமடைந்த கிருமிகள் உருவானால், அவற்றை எம் உடலில் இருந்து வெளியேற்றுவது கடினமாகும்.

இனி, காசநோய் தொற்றுக்குள்ளானவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் பற்றி பார்ப்போம். இதில் மிக முக்கியமாக, அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள மருந்துகளை வைத்தியர்கள் அறிவுறுத்தியபடி தவறாமல் உட்கொள்ள வேண்டும். இதனையடுத்து, அவர்கள் தும்மும் போதும் இருமும் போதும் தம்மிலிருந்து மற்றவர்களுக்கு நோய் தொற்று பரவாத வகையில் கைக்குட்டைகளை பாவிக்க வேண்டும். பாவித்த கைக்குட்டைகளை மிகவும் பாதுகாப்பாக அப்புறப்படுத்த வேண்டியது அவசியமாகும். கைகளைப் பயன்படுத்தி இருந்தால் அவற்றை நன்றாக கழுவிக்கொள்ள வேண்டும்.

எம்மைச் சூழவுள்ளவர்களை தொற்றடையாமல் பாதுகாக்க, இக்காலத்தில் யாரையும் அதிகளவு சந்திக்காமல் இருக்க வேண்டும். அத்துடன் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துவதை இயன்றளவு தவிர்த்துக் கொள்ள வேண்டும். அத்துடன் தொற்று கண்டறியப்பட்ட ஆரம்ப காலங்களில் பொது இடங்களுக்குச் செல்வதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். எனவே, இந்நோய்க்கான அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாக வைத்தியசாலைக்குச் சென்று அதற்கான பரிசோதனைகளைச் செய்து, தொற்று உறுதிப்படுத்தப்பட்டால் அதற்கான சிகிச்சைகளைப் பெற்று உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

**Dr. M. ஆதவன்,**
**சுவாசநோய் வைத்திய நிபுணர்**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

## வாழ்க்கையை வசந்தமாக்குவோம்

வாழ்க்கையை சுகமாகவும் ஆரோக்கியமாகவும் பயனுள்ள முறையிலும் வாழ்ந்து முடிக்க வேண்டிய கடமை எம் அனைவருக்கும் உண்டு. எல்லோருக்கும் மரணம் நிச்சயமானது.

ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த யாரும் இன்று உயிருடன் இல்லை. இன்னும் ஒன்றரை நூற்றாண்டு காலத்தில் இன்று இருப்பவர்கள் யாரும் உயிருடன் இருக்கப் போவதுமில்லை. இந்தக் குறுகிய இடைவெளியில் மனிதனின் வாழ்க்கை முற்றுப்பெற்று விட்டதாகக் கருத முடியாது.

அதன் பின்பும் அவன் நினைவுகளாய், காற்றாய், மண்ணாய், செடி, கொடியாய் இங்குதான் இருக்கப் போகிறான். இந்தவகையிலே எமது இருப்பை உறுதியாக்க வாழும் காலத்தில் எமது உடலின் ஆரோக்கியம் பேணப்பட வேண்டும் என்ற தேவை இருக்கிறது. சித்திரம் வரைவதற்கு சுவர் ஆரோக்கியமானதாக இருக்க வேண்டும். ஆரோக்கியமான சுவரில் வரைந்த சித்திரம்தான் காலம் கடந்து வாழும்.

நோயற்று வாழ்வது எப்படி? நோயுற்றும் சுகமாக வாழ்வது எப்படி? என்றெல்லாம் தெரிந்து வைத்திருப்பதும் ஒரு கலைதான்.

கடுமையான நோய்நிலைகளிலே பெரும்பாலானவை மனிதனின் கவனக்குறைவினாலும் போதியளவு மருத்துவ அறிவு இல்லாததனாலுமே ஏற்படுகின்றன. எனவே, நாம் மருத்துவம் சம்பந்தமான தகவல்களை அறிவதில் அதிகம் ஆர்வம் காட்ட வேண்டும். அதற்கமைய எமது வாழ்க்கை முறையை மாற்றிக்கொள்ள முயல வேண்டும். எதனையும் வருமுன் காப்பதற்கு முயற்சிப்போம். அதனையும் மீறி வருபவை எமது கைகளில் இல்லை. அதை ஏற்றுக்கொள்ள முயலுவோம்.

எமது சிறார்களுக்கு சுகம் சம்பந்தமான அறிவைச் சிறுவயதிலே புகட்டுவோம். தினமும் உடற்பயிற்சி செய்யும் பழக்கத்தையும் உடல் நிறையைப் பேணும் பழக்கத்தையும் சிறுவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டியது ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

அது அவர்களின் எதிர்கால வாழ்க்கை வசந்தமாவதற்கு உறுதுணையாக நிற்கும். எமது எதிர்காலத் தூண்கள் உறுதி பெறும். நல்ல சிந்தனைகளை வளர்ப்போம். தீய பழக்கங்களை ஒழிப்போம். வாழ்வை வசந்தமாக்குவோம்.


சி.சிவன்சுதன்
மருத்துவ நிபுணர்

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான மருத்துவ பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரக்கறிகளுக்கு மீண்டும் தட்டுப்பாடு ஏற்படலாம்

## விவசாய அமைச்சர் அமரவீர



(கொழும்பு)

நாட்டில் தற்போது நிலவி வருகின்ற மரக்கறிகளுக்கான தட்டுப்பாடு குறைவடைந்து வந்தாலும், எதிர்வரும் ஜூன் மாதத்திற்குள் மீண்டும் மரக்கறிகளுக்கான தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பு உள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். இதற்கு முக்கிய காரணம் வறட்சியே என அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மரக்கறிகளுக்கான தட்டுப்பாடை கட்டுப்படுத்த உரிய வேலைத்திட்டங்களை உடனடியாக ஆரம்பிக்குமாறு விவசாயத் திணைக்களத்திற்கு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார். (நி)

# அணிசேரா நாடுகளின் மாநாட்டில் பங்கேற்ற பல அரச தலைவர்களை சந்தித்து கலந்துரையாடிய ரணில்



(கம்பாலா)


உகண்டாவின் கம்பாலா நகரில் நடைபெறும் அணிசேரா நாடுகளின் மாநாட்டுக்கு இணைந்த வகையில் ஆபிரிக்க பிராந்தியத்தில் உள்ள உலகளாவிய தெற்கு நாடுகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளுடன் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இருதரப்பு கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.

தென்னாபிரிக்க ஜனாதிபதி சிறில் ரமபோசா இடையிலான சந்திப்பொன்று நேற்று பிற்பகல் இடம்பெற்றது.

தன்சானியா பிரதமர் காசிம் மஜலிவா, பஹமாஸ் பிரதமர் பிலிப் ஈ.டேவிஸ் , எத்தி யோப்பியா பிரதமர் அபே அஹமட் , பெனின் குடியரசின் உப ஜனாதிபதி மாரியம் சாபி தலதா ஆகியோர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவைச் சந்தித்து, இருதரப்பு கலந்துரையாடலில் ஈடுபட்டனர். (நி)

# இந்த வருடம் மாற்றம் வரும்

## தேரர்களிடம் ஆசி பெற்ற அநுர



(கொழும்பு)

"புதியதொரு மாற்றத்தை நாட்டு மக்கள் எதிர்பார்க்கின்றனர். அந்த மாற்றத்தை இந்த வருடம் ஏற்படுத்த முடியும். என தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடங்களின் மகாநாயக்க தேரர்களை அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. நேற்று முன்தினம் சந்தித்து ஆசி பெற்றார்.

மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து ஆசி பெற்ற பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட போதே இவ்வாறு தெரிவித்தார்.

அடுத்து என்ன தேர்தல் நடத்தப்பட்டாலும் அதனை எதிர் கொள்வதற்கு நாம் தயார். ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டால் தேசிய மக்கள் சக்தி வெற்றிபெறும் எனக் கருதுகின்றனர். பாராளுமன்றத் தேர்தலுக்கும் அஞ்சுகின்றனர். ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி சபைத் தேர்தலை முதலில் நடத்துமாறு வலியுறுத்துகின்றோம்" எனவும் அவர் தெரிவித்தார். (நி)

# இன்று ஒரு தகவல் 12



தென்கச்சி கோசுவாமிநாதன்

## செயற்கை இதயம்

"ஐயா இருக்காங்களே! அவருக்கு ரொம்பவும் அன்பான இதயம்!" அப்படி என்று யாராவது சொன்னா அதை இனிமேல் நம்பாதீர்கள்!"உன் கண்ணிலே தண்ணீர் வந்தால் என் நெஞ்சிலே இரத்தம் வரும்" என்று சொல்வது உண்டு.

அன்பை தெரிவிக்கிறதுக்காக அப்படியெல்லாம் சொல்லிக்கலாம். அதிலே ஒன்றும் தப்பு இல்லை! ஆனால் "அன்பான இதயம்" என்று சொல்கிறார்களே.

அன்புக்கும் இதயத்துக்கும் சம்பந்தம் உண்டு என்று நினைக்கிறீங்களா? ஆமாம் என்று நினைக்குது நம்ம மனசு "அப்படி இல்லை" என்று நிரூபிக்குது விஞ்ஞானம்! எப்படி தெரியுமா?

டாக்டர் பார்ன் கிளார்க்கு என்று ஒருத்தர். உலகத்திலேயே முதல் தடவையா செயற்கை இதயம் செய்து இவருக்குப் பொருத்தினாங்க! நான் சொல்வது மாற்று இதயம் இல்லை!

செயற்கை இதயம். மாற்று இதயம் இன்னொரு உடம்பிலே இருக்கிற இதயத்தை எடுத்து பொருத்துறது.

செயற்கை இதயம் - நாமா தயார் பண்ணுறது. இப்படி செயற்கை இதயம் ஒன்றை தயார் பண்ணி டாக்டர் பார்ன் கிளார்க்குக்குப் பொருத்தினாங்க. அதுக்கப்புறம் கொஞ்ச நாள் அவரு உயிரோட இருந்தார். செயற்கை இதயத்தோட அவர் இருந்தப்போ அவரு சம்சாரத்துக்கு ஒரு சந்தேகம்!

"இப்ப அவருக்கு இருக்கிறதோ செயற்கை இதயம்! அவர் தன்கிட்டே காட்டுற அன்பும் செயற்கையா இருக்குமோ"ன்னு அந்த அம்மாவுக்கு சந்தேகம்.

இயற்கையான இதயத்தோட அந்த டாக்டர் இருந்தப்போ... இதயத்திலே உன்னை வச்சிருக்கேன்.. அப்படி... இப்படி என்று சொல்லி இருப்பார்.

டாக்டர் அந்த இதயத்தை தூக்கி எறிஞ்சிட்டு செயற்கை இதயம் வைச்சுட்டாங்களே... இப்ப நம்ம கதி என்ன? இப்படி எல்லாம் அந்த அம்மா நினைச்சதில தப்பில்லை! இந்த சந்தேகத்தை நேரடியாவே அவரிடம் கேட்டுட்டாங்க! அதற்கு அவர் என்ன சொன்னார் தெரியுமா?

அவர் புன்முறுவலோடு பதில் சொன்னாராம்! இந்த செயற்கை இதயத்தாலே தன்னோட அன்பிலே எந்த விதமான மாற்றமும் கிடையாது என்று சொன்னாராம்! ஆக, அன்பு என்பது இதயத்துக்கும் அப்பாற்பட்ட விடயம் என்று தெரிகிறது.

இப்ப.. இதயத்திலே ஒருத்தருக்கு ஒரு வால்வு சரியா வேலை செய்யல என்று வையுங்க. அதுக்காக அவன் காட்டுற அன்பிலேயும் கொஞ்சம் குறைச்சுக்கவா செய்வான்?

அது சரி...இந்த செயற்கை இதயம் எந்த ஊரிலே பொருத்தினாங்க தெரியுமா? அமெரிக்காவிலே "சால்ட் லேக் சிட்டி" மருத்துவமனையிலே இந்த ஆபரேஷன் நடந்தது! பாலிர்தேன் - அலுமினியம் இது மாதிரி பொருட்களைக்கொண்டு செயற்கை இதயத்தை தயார் பண்ணியிருக்காங்க. அப்படி அதை தயார் பண்ணினவர் பேரு டாக்டர் கே.எஸ். ஜார்விக்.

அவர் பெயரையே அந்த செயற்கை இதயத்துக்கும் வைத்திருக்கிறார்கள். இந்த செயற்கை இதயம் எல்லோருக்கும் பயன்பட இன்னும் கொஞ்சம் நாளாகும். இதிலே சில குறைபாடுகள் இருக்கிறதாக பல டாக்டர்கள் குறை சொல்லியிருக்கிறார்கள். இதையெல்லாம் நிவர்த்தி பண்ணி எல்லோருக்கும் பயன்படும் மாதிரி செய்ய வேண்டும் அது இருக்கட்டும்.

அன்பு என்பது இதயத்திலே இல்லை என்று தெரிந்துவிட்டது. அப்புறம் அது வேறு எங்கே தான் இருக்குமோ? மூளையிலே இருக்குமோ? மூளையையும் செயற்கையாக தயார் பண்ண முடிந்தால் அதையும் கண்டுபிடித்திடலாம்! செயற்கை இதயம் அலுமினியத்திலே தயார் பண்ணியிருக்காங்க... சரி! செயற்கை மூளையை எதிலிருந்து தயார் பண்ணுவாங்க. அதுக்கு இனிமே தான் ஒரு மூலப்பொருளை கண்டு பிடிக்கணும்! ஆனா அதைக் கண்டு பிடிப்பதற்கும் கொஞ்சம் மூளை வேணும்! அதுக்கு எங்கே போறது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகப்போருக்கு வழிவகுக்கும் வடகொரியா

## கொரிய நாடுகளிடையே பதற்றம்

(பியாங்யாங்)

**தென்கொரியாவைத் தனது முதன்மை எதிரி நாடாக வடகொரியா அறிவித்துள்ள நிலையில், அங்கே மிகவும் பதற்றமான ஒரு சூழல் ஏற்பட்டுள்ளது.**



வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன், தென் கொரியாவை தனது நாட்டின் "முதன்மை எதிரி" என்று அறிவித்துள்ளார். எல்லையில் 0.001 மி.மீ அத்துமீறினால் கூட போரை ஆரம்பிக்கப் போவதாக எச்சரித்துள்ளார்.

தென்கொரியா வடகொரியா இடையே பல காலமாக மோதல் இருந்தாலும் கூட கடந்த வாரம் தான் தென் கொரியாவை முதன்மை எதிரி நாடாக வடகொரியா அறிவித்தது.

தென் கொரியாவை முதன்மை எதிரி என வடகொரியா சொல்வது வெறும் எச்சரிக்கை மட்டும் இல்லை. அது எப்போது வேண்டுமானாலும் போராகவும் மாறலாம் என்று வல்லுநர்கள் எச்சரிக்கிறார்கள்.

சிறு சிறு இராணுவ மோதல்கள் எப்போது வேண்டுமானாலும் போராக மாறலாம் என்பதே பலரது அச்சமாக இருக்கிறது. ஒரு பக்கம் ரஷ்யா வடகொரியாவுக்கு ஆதரவாக இருக்கும் நிலையில், மறுபுறம் அமெரிக்கா தென்கொரியாவுக்கு ஆதரவாக இருக்கிறது.

இதனால் இந்த பிரச்சினை இரு நாடுகளுக்கும் இடையேயான மோதலாக மட்டும் இல்லாமல் அது உலகப்போராக விரிவடையும் அபாயமும் இருப்பதாக வல்லுநர்கள் எச்சரிக்கிறார்கள்.

தற்போது இருக்கும் சூழலை வைத்துப் பார்க்கும் போது இரு நாடுகளுக்கும் இடையே இராணுவ மோதல் ஏற்படும் வாய்ப்புகள் மிக அதிகம். வடகொரியாவிடம் இப்போது அணு ஆயுதங்களும் இருக்கும் நிலையில், அது உலக நாடுகளைப் பதற்றத்தில் தள்ளுகிறது.

ஏனென்றால் இப்போது பல நாடுகளில் அணு ஆயுதங்கள் இருக்கும் நிலையில், அது பூமியை மொத்தமாக அழிக்கும் அபாயம் இருக்கிறது. வட கொரியா பொருளாதார ரீதியாக பின்தங்கி இருக்கின்ற நிலையில் தென்கொரியா எந்தளவுக்கு வளர்ந்து இருக்கிறது குறித்து தகவல்கள் வட கொரியா மக்களுக்குத் தெரிய ஆரம்பிக்கிறது.


இதனால் மக்களைத் திசை திருப்பவே வடகொரிய ஜனாதிபதி கிம் இப்படியெல்லாம் செய்வதாகச் சர்வதேச வல்லுநர்கள் கூறியுள்ளனர். (நி)

# அயோத்தி ராமர் கோவில் சீதாதேவிக்கு தங்க சரிகை பட்டு சேலை

(டில்லி)

தெலங்கானா மாநிலம், சிரசில்லா ஜவுளிநகரத்தைச் சேர்ந்த நெசவுத் தொழிலாளியான ஹரிபிரசாத் இவரது மனைவி ரேகா. இருவரும் இணைந்து அயோத்தி ஸ்ரீராமர் கோவிலில் உள்ள சீதாதேவிக்கு தங்க சரிகை சேலை நெய்து சாதனை படைத்துள்ளனர்.

8 கிராம் தங்கம், 20 கிராம் பட்டு இழைகள் கொண்டு 20 நாட்களில் பட்டுச்சேலையை விஷேசமாக தயார் செய்துள்ளனர். அதில் ஸ்ரீராமரின் படங்கள் இடம் பெற்றுள்ளன.



புடவையின் ஒரு புறத்தில் அயோத்தி ராமர்கோவில், ஸ்ரீராம பட்டாபிஷேகம் மற்றும் ஜெய்ஸ்ரீராம் என தெலுங்கிலும், மறுபுறம் ஜெய் ஸ்ரீராம் என ஹிந்தியிலும் நெய்யப்பட்டுள்ளன.

ஸ்ரீராமரின் படங்கள் புடவையின் விளிம்பில் வைக்கப்பட்டு, சேலையின் மீதமுள்ள பகுதி ஸ்ரீராமர் பிறந்தது முதல் முடிசூட்டு விழா வரையிலான ராமாயண காட்சிகள் இடம் பெற்றுள்ளன.

இவ்வளவு சிறப்பு அம்சங்களுடன் நெய்யப்பட்டுள்ள பட்டுப் புடவையை வரும் ஜனவரி 26 ஆம் திகதி டில்லியில் நடைபெறும் குடியரசு தின விழாவில் பிரதமர் நரேந்திர மோடியின் பார்வைக்கு ஒப்படைக்கவுள்ளனர். (நி)


**சேவை**

**Medi help முதியோர்/ நோயாளர்/ படுக்கை நோயாளிகள் உட்பட விசேட வைத்தியர்களின் மேற்பார்வையின் கீழ் குறைந்த செலவில் சேவைக்கு**

**077 712 6860/59**
**076 007 7776 (DR)**


# பாடசாலை விடுதியில் தீ விபத்து-13 பேர் பலி

## சீனாவில் துயரம்

(பீஜிங்)

மத்திய சீனாவில் யாங் ஷாங்புவில் உள்ள பாடசாலை விடுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் 13 பேர் உயிரிழந்தனர்.

தங்கும் விடுதி கட்டடம் ஒன்றில் நேற்று முன்தினம் இரவு தீ பரவியுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. தீ விபத்துக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை. (நி)


**பெயர் மாற்ற அறிவித்தல்**

செட்டி வீதி இணுவில் மேற்கு- இணுவிலில் வசிக்கும் அரியகுட்டி பூபாலன் என்னும் பெயரை இன்று முதல் பூபாலசிங்கம் என பெயர் மாற்றம் செய்கிறேன். எனவே இனிவரும் காலங்களில் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் இப்பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கை வாழ் சனநாயக குடியரசின் கீழ் வாழும் மக்கள் அனைவருக்கும் அறியத்தருகிறேன்.

உண்மையுள்ள
அரியகுட்டி பூபாலசிங்கம் (சி-8172)


# ரஷ்ய எண்ணெய் களஞ்சியசாலை மீது உக்ரைன் ட்ரோன் தாக்குதல்



(மொஸ்கோ)

ரஷ்யாவின் தென் பிராந்தியத்தில் உள்ள எண்ணெய் களஞ்சியசாலை உக்ரைனின் ட்ரோன் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது.

இந்த தாக்குதலில் களஞ்சியசாலையின் பெரும்பகுதியில் தீ பரவியுள்ளது.

எண்ணெய் களஞ்சியசாலையின் நான்கு குதங்களில் தீ பற்றியுள்ளது. இதனைத் தொடர்ந்து 1000 சதுர மீற்றர் பரப்பிற்கு தீ பரவியுள்ளது.

ரஷ்ய எண்ணெய் களஞ்சியசாலை மீது இரண்டு நாட்களுக்குள் இரண்டாவது தடவையாக உக்ரைன் ட்ரோன் தாக்குதலை மேற்கொண்டுள்ளது. (நி)


**வருட குத்தகைக்கு வழங்கல்**
**லக்சுமி மணிமண்டபம்**
**விளையாட்டரங்கு வீதி, கல்வியங்காடு**

- திருமண விழாக்கள்
- பிறந்தநாள் கொண்டாட்டங்கள்
- பூப்புனித நீராட்டு விழாக்கள்
- நிறுவன ஒன்றுகூடல்கள்

என்பன சிறப்பாக நடத்தக் கூடிய இடம்.
குத்தகைக்கு வழங்கப்படும்

தொடர்புகளுக்கு-

**077 150 9295**
**076 051 4226**
**074 027 7183**

(8681)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையை உறுதியாகக் கடைப்பிடிப்பதில் இருந்துதான் வலிமை எல்லாம் கிடைக்கிறது.
– காந்திஜி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## விழாக்கோலம் பூண்ட அயோத்தி மாநகர்

இராமபிரானுக்கு பட்டாபிஷேகம் நடைபெறப் போகிறது. அயோத்தி மாநகர் விழாக் கோலம் பூண்டுள்ளது.

அயோத்தி மக்கள் தங்கள் பிள்ளைக்குப் பட்டாபிஷேகம் நடைபெறுவது போன்று மகிழ்ச்சியில் திளைத்தனர் எனக் கம்பராமாயணத்தில் படித்தது நினைவுக்கு வருகிறது.

அன்று பட்டாபிஷேகத்துக்காக அயோத்தி மாநகர் விழாக் கோலம் பூண்டது என்ற காட்சியை ஒரு கற்பனையாக – கம்பனின் கவித்துவச் சிறப்பாக எண்ணியதுண்டு.

ஆனால் இப்போது இராமபிரானின் கும்பாபிஷேகத்துக்காக அயோத்தி மாநகர் விழாக் கோலம் கொண்டிருப்பதைப் பார்க்கும்போது இதயம் பூரித்து நிற்கிறது.

ஆம், 500 ஆண்டுகளுக்குப் பின்னர் இராம ஜென்ம பூமியில் இராம பிரானுக்குக் கோயில் அமையப் பெற்றுள்ளது.

ஆயிரம் கோடி இந்திய ரூபாயில் அமையப் பெற்ற அயோத்தி இராம ஜென்ம பூமி ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை 22ஆம் திகதி (22.01.2024) நடைபெறவிருக்கிறது.

அயோத்தியில் நாளை நடைபெற இருக்கும் கும்பாபிஷேகத்தில் இந்திய தேசத்தின் அத்தனை பேராளர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் மிகப்பெரும் அற்புதம் அயோத்தி இராம ஜென்ம பூமி ஆலய மகா கும்பாபிஷேகத்தையொட்டி, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் பன்னிரண்டு நாள் விரதமிருந்து ஆத்மீகப் பயணத்தை மேற்கொண்டிருப்பதாகும்.

நூற்று நாற்பது கோடி மக்களின் தலைவனாக – பாரத தேசத்தின் பிரதமராக – உலகத் தலைவர்களின் மரியாதைக்கும் கௌரவத்துக்குமுரிய உன்னதத் தலைவனாக இருக்கக்கூடிய பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் பன்னிரெண்டு நாள் விரதமிருந்து ஆன்மீகப் பயணத்தை மேற்கொண்டு, வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயங்களைத் தரிசித்து வருவது இந்திய பிரதமர் மோடி; ஆன்மீகத்தில் எத்துணை நம்பிக்கையும் ஈடுபாடும் கொண்டுள்ளார் என்பதை வெளிப்படுத்துவதுடன் இந்திய தேசம் ஆன்மீக பூமி என்பதையும் நிரூபித்து நிற்கிறது.

அதிலும் ஆன்மீகப் பயணத்தை மேற்கொண்டிருக்கும் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தமிழகத்திலுள்ள ஸ்ரீரங்கம் ரங்கநாத சுவாமி திருக்கோயிலிலும் இராமேஸ்வரம் இராமநாத சுவாமி திருக்கோயிலிலும் தரிசனம் செய்துள்ளார். இதற்கும் மேலாக, இராமேஸ்வரத்திலுள்ள 22 புனித தீர்த்தங்களில் நீராடி இந்து சமயத்தின் புனிதத்தை உலகுக்கு எடுத்துக் கூறியுள்ளார்.

ஆம், ஸ்ரீரங்கம் சூரிய வம்சத்து தசரத சக்கரவர்த்தியின் சந்ததியினர் வழிபட்ட ஆலயம்.

அதேபோல் பிரமகத்தி தோசம் நீங்கும் பொருட்டு இராமபிரான் வழிபட்ட சிவனாலயம் இராமேஸ்வரம் திருக்கோயில்.

ஆக, அயோத்தியில் நாளை கும்பாபிஷேகம் நடைபெறுவதற்கு முன்னதாக, இராமபிரான் வழிபட்ட ஆலயங்களுக்குச் சென்று பிரதமர் நரேந்திர மோடி வழிபாடு செய்வதென்பது ஆன்மீகத்தின் மேன்மையை, அதன் அவசியத்தை உலக மக்களுக்கு எடுத்தியம்புவதாக அமைவது அதன் ஒட்டு மொத்தச் சிறப்பு எனலாம்.

# போதைப்பொருளை ஒழிக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்

## சாகல ரத்நாயக்க தெரிவிப்பு

எதிர்க்கட்சிகள் எவ்வகையான விமர்சனங்களை முன்வைத்தாலும் அரசாங்கம் முன்னெடுத்துவரும் புதிய பொருளாதார மறுசீரமைப்புக்களின் பலன்கள் எதிர்காலத்தில் மக்களுக்கு கிடைக்குமென தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

கொழும்பு தெற்கு பொலிஸ் பிரிவின் சமூக பொலிஸ் குழுக்களைத் தெளிவூட்டும் வகையில் நேற்று முன்தினம் கொழும்பு நெலும் பொக்குண கலையரங்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்விலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் முன்னேற்றத்திற்கு சட்டத்தையும் சமாதானத்தையும் பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். மக்கள் அச்சமின்றி வாழக்கூடிய சூழலை உருவாக்க வேண்டும். அதேபோல் முதலீட்டாளர்கள், வர்த்தகர்கள் தமது செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு உகந்த சூழலையும் உருவாக்க வேண்டும். எதிர்கால சந்ததியின் பாதுகாப்பிற்கும் சட்டமும் சமாதானமும் வலுவூட்டப்பட வேண்டியது அவசியமாகும்.

அபிவிருத்தி அடைந்த நாடுகளில் சட்டம், சமாதானம் தொடர்பிலான வெளிப்படைத் தன்மை காணப்படுகிறது. அதற்கு அவசியமான மூலதனம், மனித வளம், தொழில்நுட்பம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படுகிறது. நாம் அதே நிலைக்குச் செல்ல வேண்டும்.

சுற்றுலாத்துறையை நாம் இலகுவாக அபிவிருத்தி செய்யலாம். இன்றளவிலும் சுற்றுலாத்துறை முன்னேற்றமடைந்துள்ளது. 25 இலட்சம் சுற்றுலா பயணிகள் இவ்வருடத்தில் இலங்கைக்கு வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. சுற்றுலா அபிவிருத்திக்காக அன்று மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் இன்று பலனளிக்கின்றன. அதனால் அந்நியச் செலாவணியும் அதிகமாக கிடைக்கிறது.

எமது நாட்டுக்கும் இளைய சமுதாயத்தினருக்கும் சிறந்த எதிர்காலம் உள்ளது. ஆனால் மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் மத்தியில் நம்பிக்கை இல்லாதபோது நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது.

போதைப் பொருள் பாவனை உலகத்தையே உலுக்குகிறது. அவற்றை ஒழிக்க வேண்டும். அதற்கும் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். போதைப்பொருள் ஒழிப்புக்காக பொலிஸார் உள்ளிட்ட பாகாப்புத் தரப்பினர் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர் என்று தெரிவித்தார். (ம-7)

## மாவிட்டபுரம் கந்தனின் திருமஞ்ச வெள்ளோட்டம்

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் புதிதாக நிர்மாணிக்கப்பெற்ற 24 அடி உயரம் கொண்ட திருமஞ்சம் வெள்ளோட்டம் எதிர்வரும் புதன்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வியாழக்கிழமை (25) தைப்பூச திருநாளன்று மாலை 6 மணிக்கு மாவைக்கந்தன் புதிதாக நிர்மாணிக்கப்பெற்ற திருமஞ்சத்தில் பவனிவருவார் எனவும் இரண்டு தினங்களிலும் முருகப் பெருமான் அடியவர்கள் ஆலயத்திற்கு வருகை தந்து வடம் பிடித்து அருளைப் பெறுமாறு ஆதீன கர்த்தா அறிவித்துள்ளார். (ம-7)

# பரமபிதா காட்டிய பாதை

## பாவத்தை வெறுத்து மனமாற்றம் பெறுவோம்

இயேசு தமக்கு சீடர்களை அழைப்பதை இன்றைய பைபிளின் மாற்கு நற்செய்திப்பகுதி கூறுகிறது. இயேசுவின் முதல் நான்கு சீடர்களும் அழைக்கப்பட்ட வரலாற்றை நாம் வாசிக்கிறோம். எம் ஒவ்வொருவருக்கும் இறைவன் தருகின்ற அழைப்பை எண்ணிப் பார்க்கத் தூண்டப்படுகிறோம். இந்த நான்கு பேருமே எளிய உழைப்பாளிகள். ஆனால், இவர்களைத்தான் இறைவன் தன் நற்செய்தியை அறிவிக்க அழைத்தார். அவர்கள் அனைத்தையும் விட்டுவிட்டு அழைப்பை ஏற்று நற்செய்தி அறிவித்தனர். திருமுழுக்கு பெற்ற ஒவ்வொருவருக்கும் நற்செய்தி அறிவிக்கும் கடமை உண்டு என்பதை இந்த பைபிள்பகுதி நமக்கு நினைவூட்டுகிறது.

இந்த பைபிள்ப் பகுதியில் மூன்று முக்கியச் செய்திகள் இயேசுவின் பணிவாழ்வின் மையமாகக் கருதப்படுகிறது. **மனமாற்றம், நற்செய்தி, நம்பிக்கை** என்பது தான். மனமாற்றம் என்பது பாவத்தை வெறுப்பது. பாவத்திலே வாழ்ந்து, பாவத்தோடு வாழ்ந்து, பாவியாக இருந்தவன், இப்போது பாவத்தை வெறுக்கிற நிலை தான் மனமாற்றம்.

இரண்டாம் செய்தி -நற்செய்தி. இயேசு நற்செய்தி அறிவிப்பதற்காக வந்திருக்கிறார். அது என்ன நற்செய்தி. நம்பிக்கை தரும் நற்செய்தி. முற்காலத்தில், வாழ்வே நம்பிக்கையின்மையினால் நிறைந்திருந்தது. அனைத்தையும் எதிர்மறையாகச் சிந்திக்கும் எண்ணம் இருந்தது. ஆனால், இயேசுவின் மண்ணக வாழ்வு நம்பிக்கை தரும் நற்செய்தியாக இருக்கிறது. அவரது போதனைகளும் அவர் செய்த புதுமைகளும் நம்பிக்கையிழந்திருந்த மக்களுக்குப் புதிய ஒளியைத் தருவதாக இருக்கிறது.

மூன்றாவது செய்தி- நம்பிக்கை. நம்பிக்கை கடவுளின் அன்பை, இரக்கத்தை, மன்னிப்பை, பராமரிப்பை உணர்த்துகிறது. கடவுள் எல்லாம் வல்லவராக இருக்கிறார். அவரிடத்திலே நம்பிக்கை வைக்கிறபோது, நாம் மகிழ்வோடு வாழ்வை உலக வாழலாம் என்பதை எடுத்துக்காட்டுகிறது

சீடர்கள் அழைக்கப்பட்டவர்கள். அழைப்பவர் ஆளுமை நிறைந்தவர். அழைப்பு மறுக்க முடியாதது. அழைக்கப்படுபவருக்கு அந்தஸ்து அவசியமில்லை. அழைக்கப்படுபவர் முற்றிலும் புதிய, உயரிய ஒரு [illegible] இலக்கு [illegible] மனிதர்களைப் பிடிப்பது. மனிதனை முழு மனித வாழ்வுக்கு அழைத்துச் செல்வது. அழைக்கப்படுவோர் யாராகவும் எந்நிலையிலும் இருக்கலாம். முதியவராக, இளைஞனாக, ஏழையாக இருக்கலாம். (யோவான்போல) கூலியாள்களை வைத்து வேலை செய்யும் உயர்நிலையிலும் இருக்கலாம். ஆயராக இருக்கலாம். அடித்தள விசுவாசியாகவும் இருக்கலாம்.

எனவே, நாமும் இயேசுவைப்போல மனிதர்களைப் பிடித்து முழு மனிதனாக்கும் உயர் பணிக்கு அழைக்கப்பட்டிருக்கின்றோம். எங்கள் நிலையும் இயேசுவின் தனிப்பட்ட அழைப்பு. இந்த அழைப்பை நாம் தவிர்க்க முடியாது. அதற்கு ஏற்ப பணியாற்ற வேண்டியது எங்கள் கடமை. நல்லவைகள் நடைபெறுவதைத் தடுக்க முடியாது. நல்லவைகள் தொடர்வதை நிறுத்த முடியாது. நல்லவர்கள் தொடர்ந்து வருவர். நல்லவைகள் தொடர்ந்து நடக்கும்.

திருமுழுக்கு யோவானைக் கைது செய்தால் மனமாற்றப் பணிகள் முடங்கிப் போய்விடுவதில்லை. "காலம் நிறைவேறிவிட்டது. இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது. மனம்மாறி நற்செய்தியை நம்புங்கள்" என்ற முழக்கம் இயேசுவால் தொடர்ந்து முழக்கப்பட்டது. இயேசுவைச் சிலுவையில் அறைந்து கொன்றதால் அந்த புதுவாழ்வின் முழக்கம் முடமாகிவிடவில்லை. உயிர்த்த இயேசுவின் சீடர்கள் ஓங்கி ஒலித்தனர். ஒன்று பன்னிரெண்டாகி பல மடங்காகியது. இன்றும் நல்லவைகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. நல்லவர்கள் இன்றும் ஆங்காங்கே உதயமாகிக்கொண்டு இருக்கிறார்கள். நற்செயலாற்ற அழைப்புக்கு அர்ப்பணிப்போர் இன்றும் ஏராளம். இதை யாரும் தடுத்து நிறுத்த முடியாது. பணியையும் பணியாளர்களையும் தடுக்க முடியாது. அருட்பணியும் அருட்பணியாளர்களும் புரட்சியாளர்கள். ஆன்மிகத்தை ஆழப்படுத்தி மனித வாழ்வை புதுப்பிக்கும் புரட்சிப் பணியாளர்கள். தீமைகளும் அநீதியும் மலிந்து விட்ட இன்றைய நாட்களில் தனிநபர் மாற்ற நிகழ்வுகள், அமைப்புகள் மாற்றப் போராட்டங்கள் அவசியமாகிவிட்டன. அவற்றைச் செய்வதற்கு இறைவன் நம் ஒவ்வொருவரையும் அழைக்கிறார். இந்த மாற்றங்கள் நம்மில் தொடங்கட்டும். இறையாட்சிப் பணி வேகம் பெறட்டும்.

**ம.பிரான்சிஸ்க்,**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தை மாத இராசிபலன்கள்

## சிம்மம்

**சிம்ம இராசி வாசகர்களே!**

குடும்பத்தில் மகிழ்ச்சியும் உற்சாகமும் காணப்படும். எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் செல்வாக்கு அதிகரிக்கும். உறவினர்களும் நண்பர்களும் மிகவும் உதவியாக இருப்பார்கள். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். திருமணம், வளைகாப்பு போன்ற சுபநிகழ்ச்சிகளால் வீட்டில் மகிழ்ச்சி நிலவும். சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கும். மாதப் பிற்பகுதியில் உறவினர்கள் வகையில் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்பட சாத்தியம் உள்ளதால், பொறுமையுடன் இருப்பது மிகவும் அவசியம். புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கி மகிழ்வீர்கள். குடும்பத்துடன் வெளியிடங்களுக்குச் சென்று வருவீர்கள். விருந்து விசேஷங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்பு உண்டு. மாதத்தின் பிற்பகுதியில் சகோதரர்களால் பிரச்சினைகளும் கடன் தொல்லைகளும் ஏற்படக்கூடும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். சிலருக்கு வெளியூர், வெளி மாநிலப் புண்ணியத் தலங்களுக்குச் சென்று வரும் வாய்ப்பு உண்டாகும். குடும்பப் பெரியவர்களின் அறிவுரையின்படி நடந்து கொண்டு அவர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

அலுவலகத்தில் சக ஊழியர்களிடம் செல்வாக்கு அதிகரிக்கும். பணிகளில் அவர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும். நீண்டநாட்களாக எதிர்பார்த்த பதவி உயர்வு, சம்பள உயர்வு போன்ற சலுகைகள் கிடைக்க வாய்ப்பு ஏற்படும். மேலதிகாரிகளின் அன்பும் ஆதரவும் உங்களை உற்சாகப்படுத்தும்.

தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். எதிரிகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் நீங்கும். புதிய முயற்சிகள் வெற்றி தரும். வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் இருந்தால் அதற்கான முயற்சிகளில் இந்த மாதம் ஈடுபடலாம்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு உறவினர்களிடையே மதிப்பும் மரியாதைம் அதிகரிக்கும். கணவரின் அன்பும் ஆதரவும் மனதுக்கு மகிழ்ச்சி தரும். பணிக்குச் செல்லும் பெண்களுக்கு அலுவலகத்தில் புதிய பொறுப்புகள் கிடைக்கும்.

**சாதகமான நாட்கள்:** ஜன: 20,24,28,30 பெப்: 3,6,9

**சந்திராஷ்டம நாட்கள்:** ஜன 16 முற்பகல் முதல் 17,18 மதியம் வரை பெப் 12 முன்னிரவு முதல்

**அதிர்ஷ்ட எண்கள்:** 1, 9

**வழிபட வேண்டிய தெய்வம்:** துர்க்கை, முருகப் பெருமான்.

**பரிகாரம்:** செவ்வாய்க்கிழமைகளில் கந்தசஷ்டி பாராயணம் செய்வதும் ஞாயிற்றுக்கிழமைகளில் துர்க்கைக்கு அர்ச்சனை செய்வதும் நன்மை தரும்.




## கன்னி

**கன்னி இராசி வாசகர்களே!**

திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். குழந்தைகளால் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நிகழும். நண்பர்கள் அனுகூலமாக இருப்பார்கள். அவர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வெளிவட்டாரத்தில் செல்வாக்கு அதிகரிக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் ஏற்படும். எடுத்த செயலை வெற்றிகரமாக முடிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். குடும்பத்தில் உறவினர்களிடையே இருந்த கருத்து வேறுபாடு நீங்கி, சுமுகமான சூழ்நிலை உண்டாகும். வெளிவட்டாரத்தில் மதிப்பு, மரியாதை கூடும். மாதப் பிற்பகுதியில் குடும்பப் பெரியவர்களால் நன்மைகள் நடக்கும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்கள் உதவிகரமாக இருப்பார்கள். புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். சிலருக்கு புண்ணியத் தலங்களுக்குச் செல்லும் வாய்ப்பு உண்டாகும். அவ்வப்போது தாயாருடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்பு உள்ளதால் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். அவருடைய உடல்நலனிலும் கூடுதல் கவனம் தேவைப்படுகிறது. தாய்வழி உறவினர்களிடம் அனுசரணையாக நடந்து கொள்ளவும்.

அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். உயர் அதிகாரிகள் அனுசரணையாக இருப்பார்கள். சக ஊழியர்கள் மத்தியில் உங்கள் அந்தஸ்து உயரும். சிலருக்கு நீண்டநாளாகத் தடைப்பட்ட பதவி உயர்வு கிடைக்கும்.

தொழில், வியாபாரத்தில் முன்னேற்றமான சூழ்நிலையே காணப்படும். உழைப்புக்கேற்ற ஆதாயம் கிடைக்கும். பங்குதாரர்களுடன் இணக்கமான சூழ்நிலையே காணப்படும். மாதப் பிற்பகுதியில் கொடுக்கல் - வாங்கல் விடயத்தில் எச்சரிக்கை அவசியம்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு உறவினர்கள் மத்தியில் மதிப்பு, மரியாதை கூடும். கணவரின் அன்பும் அவர் வழி உறவினர்களால் நன்மைகளும் ஏற்படும். அலுவலகத்துக்குச் செல்லும் பெண்களுக்கு சலுகைகள் கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.

**சாதகமான நாட்கள்:** ஜன: 16,22,26,29,31, பெப்: 1,3,6,10,12

**சந்திராஷ்டம நாட்கள்:** ஜன 18 மதியம் முதல் 19,20 மாலை வரை

**அதிர்ஷ்ட எண்கள்:** 4, 6

**வழிபட வேண்டிய தெய்வம்:** அம்பிகை, மகாவிஷ்ணு.

**பரிகாரம்:** புதன்கிழமைகளில் விஷ்ணுசகஸ்ரநாமம் பாராயணம் செய்வதும் வியாழக்கிழமைகளில் தட்சிணாமூர்த்திக்கு நெய்தீபம் ஏற்றி அர்ச்சனை செய்வதும் நன்மை தரும்.




## துலாம்

**துலாம் இராசி வாசகர்களே!**

பணவரவு கணிசமாக உயரும். புதிய ஆடை, ஆபரணங்கள் சேரும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதையும் சாதிக்க வேண்டும் என்ற மனஉறுதி ஏற்படும். பழைய வாகனத்தை மாற்றிவிட்டு, புதிய வாகனம் வாங்குவீர்கள். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் நிம்மதியும் ஏற்படும். பிரிந்திருந்த தம்பதி ஒன்று சேருவார்கள். சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கும். சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். குடும்பத்துடன் விருந்து விசேஷங்களுக்குச் சென்று வருவீர்கள். உறவினர்களால் உதவி கிடைக்கும். அதேநேரத்தில் அவர்களில் சிலரால் சிறு உபத்திரவமும் ஏற்படலாம். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களிடம் சற்று பக்குவமாக நடந்து கொள்வது நல்லது. வெளிவட்டாரத்தில் மதிப்பு, மரியாதை கூடும். வாழ்க்கைத் துணை வழி உறவுகள் உங்கள் ஆலோசனைகளை ஏற்றுக் கொளவார்கள். அவர்கள் மத்தியில் உங்கள் கௌரவம் ஒரு படி உயரும். தந்தைவழி உறவினர்கள் மூலம் எதிர்பார்த்த காரியம் முடிவதில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டு நீங்கும். மாதப் பிற்பகுதியில் சகோதரர்களால் ஆதாயம் கிடைக்கும்.

அலுவலகத்தில் இதுவரை இருந்து வந்த இறுக்கமான சூழ்நிலை மாறும். உங்கள் பணிகளில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். சிலருக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு, ஊதிய உயர்வு போன்ற சலுகைகள் கிடைக்கும். நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும்.

தொழில் மற்றும் வியாபாரத்தில் லாபம் சுமாராகத்தான் கிடைக்கும். மாத முற்பகுதியில் வீண் விரயம் ஏற்பட சாத்தியமுள்ளது. புதிய முயற்சிகளைத் தவிர்ப்பதுடன், வியாபாரத்தை விரிவுபடுத்தும் முயற்சிகளையும் தவிர்க்கவும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு பல வகைகளிலும் முன்னேற்றம் தரும் மாதமாக இருக்கும். புகுந்த வீட்டு உறவினர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் கூடும். அலுவலகத்துக்குச் செல்லும் பெண்களுக்கு சிறப்பான பலன்கள் ஏற்படக்கூடும். எதிர்பார்த்த பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைக்கக் கூடும்.

**சாதகமான நாட்கள்:** ஜன: 17,24,27,29 பெப்: 2,5,8,11

**சந்திராஷ்டம நாட்கள்:** ஜன 20 மாலை முதல் 21,22 நடு இரவு வரை

**அதிர்ஷ்ட எண்கள்:** 3, 7

**வழிபடவேண்டிய தெய்வம்:** சிவ பெருமான், ஆஞ்சநேயர்

**பரிகாரம்:** திங்கள்தோறும் சிவ பெருமானுக்கு வில்வதளத்தால் அர்ச்சனை செய்வதும் சிவஸ்துதிகளைப் பாராயணம் செய்வதும் நன்மை தரும். சனிக்கிழமைகளில் ஆஞ்சநேயருக்கு வெற்றிலை மாலை சாத்தி வழிபடவும்.




## விருச்சிகம்

**விருச்சிக இராசி வாசகர்களே!**

வெளிவட்டாரத்தில் செல்வாக்கு அதிகரிக்கும். புதிய முயற்சிகள் அனைத்தும் மிக எளிதாக வெற்றி அடையும். எதிர்பார்த்த பணவரவு கிடைப்பதுடன், எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகளும் ஏற்படும். குடும்பத்துக்குத் தேவையான பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. பிரிந்திருந்த கணவன் - மனைவி ஒன்று சேருவார்கள். திருமண முயற்சிகள் சாதகமாக முடியும். சுபநிகழ்ச்சிகளை திட்டமிட்டபடி நடத்தி முடிப்பீர்கள். தந்தையுடன் இருந்து வரும் மோதல் போக்கு நீங்கி, சுமுகமான நிலை ஏற்படும். உறவினர் மற்றும் நண்பர்கள் வீட்டு விருந்து விசேடங்களில் கலந்துகொள்வீர்கள். சிலருக்கு வெளிமாவட்டங்களில் உள்ள புகழ்பெற்ற புண்ணியத் தலங்களுக்குச் செல்லும் வாய்ப்பு உண்டாகும். இதுவரை இருந்த உடல் உபாதைகள் நீங்கி, உடல் ஆரோக்கியம் மேம்படும். இரவு நேரங்களில் தொலைதூரப் பயணம் மேற்கொள்வதைத் தவிர்க்கவும்.

அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும். பணிகளில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள். உயர் அதிகாரிகள் உங்கள் ஆலோசனைகளுக்கு உரிய அங்கீகாரம் கொடுப்பார்கள். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். [illegible] கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

தொழில் மற்றும் வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விடவும் விற்பனையும் லாபமும் கூடுதலாகக் கிடைக்கும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் வெற்றி பெறும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மகிழ்ச்சி தரும் மாதம். புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கி மகிழ்வீர்கள். விருந்து விசேடங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்பு உண்டாகும். அலுவலகத்துக்குச் செல்லும் பெண்களுக்கு பல வகைகளிலும் அனுகூலமான மாதம் இது.

**சாதகமான நாட்கள்:** ஜன: 16,19,27,29, பெப்: 1,4,6,9,12

**சந்திராஷ்டம நாட்கள்:** ஜன 22 நடு இரவு முதல் 23,24,25 காலை வரை

**அதிர்ஷ்ட எண்கள்:** 7, 9

**வழிபடவேண்டிய தெய்வம்:** முருகப்பெருமான், விநாயகர்

**பரிகாரம்:** செவ்வாய்க்கிழமைகளில் முருகப் பெருமானுக்கு செவ்வரளி மலர்களால் அர்ச்சனை செய்வதும், கந்த சஷ்டி கவசம் பாராயணம் செய்வதும், வெள்ளிக்கிழமைகளில் விநாயகருக்கு அறுகம்புல்லால் அர்ச்சனை செய்வதும் நன்மை தரும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்சாரம்...

உயிரிழந்த இளைஞனுடைய சடலம் மீட்கப்பட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,30)

## விளையாடிய...

வராவார்.

வீட்டில் ஊஞ்சல் ஆடி விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் கழுத்தில் ஊஞ்சல் கயிறு சுற்றி இறுகியுள்ளது. இதனையடுத்து

குறித்த சிறுவனை முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர். வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் முன்னரே குறித்த சிறுவன் உயிரிழந்து விட்டதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,299)

## இளைஞனின்...

அ.த.க பாடசாலைக்கு முன்பாக உள்ள கழிவு வாய்க்கால் ஒன்றிலேயே குறித்த இளைஞனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மருதநகர் பகுதியைச் சேர்ந்த ஜெயராம் டினேஸ் (வயது-33) எனும் இளைஞனே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,100,316)

## வவுனியாவில்...

கப்பட்டுள்ளது.

அறுபது வயது மதிக்கத்தக்க இவ் முதியவர் விபத்தின் காரணமாகவே உயிரிழந்துள்ளதாகவும், விபத்தினை ஏற்படுத்திய வாகனம் தப்பிச் சென்றுள்ள நிலையில் விபத்தை ஏற்படுத்தியவர்கள் இதுவரை கைது செய்யப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,250)

## பசிலை...

பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு தயாராகி வருவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் பெரும்பான்மையை பெற்றுக் கொள்ளும் வகையில் கூட்டணி அமைத்து அதிக அனுகூலங்களை பெற்றுக்கொள்ள ஆலோசிக்கப்பட்டுள்ளது.

பொதுஜன பெரமுனவிற்கு ஜனாதிபதி அல்லது பிரதமர் பதவியை பெற்றுக் கொடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு பரிந்துரைத்துள்ளது.

எதிர்வரும் தேர்தலில் பொதுஜன பெரமுன மீண்டும் ஆட்சியைப் பிடிக்கும் வகையில் நாடு முழுவதும் 2500 அரசியல் கூட்டங்கள், மாநாடுகள் மற்றும் பேரணிகளை நடத்துவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ம-7)

## நிறைவேற்று...

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை காரணமாக நாடு அழிந்தது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வதாக ரணில் விக்கிரமசிங்க கூறினால், தான் இரண்டு கைகளையும் உயர்த்தி ஆதரவளிப்பேன் எனவும் அவர் கூறியுள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சியை முறையை மாற்றிய பின்னர், மேலும் இரண்டு வருடங்கள் ரணில் விக்கிரமசிங்க பதவியில் இருந்தாலும் பிரச்சினையில்லை எனவும் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## நிகழ்நிலை...

பாதுகாப்பதற்கான குழுவும் 58 சர்வதேச அமைப்புகளும் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளன.

சிவில் சமூகத்தினர் மனித உரிமை அமைப்புகளுடனும் அவர் கலந்தாலோசனைகளை மேற்கொள்ள வேண்டும் என சர்வதேச அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன. தவறான அறிக்கைகள் தவறான விருப்பங்கள் என்பவற்றிற்கு ச[illegible] தெளிவ[illegible]

கப்பட்டுள்ள வரைவிலக்கணங்கள் காரணமாக பேச்சுரிமையை கண்மூடித்தனமாக கட்டுப்படுத்தப்படலாம் தணிக்கைக்கு அதிகாரம் வழங்கப்படலாம் என சர்வதேச அமைப்புகள் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஆணைக்குழுவிற்கு அதிகளவிலான அதிகாரங்களை சட்டமூலம் வழங்குகின்றது எனவும் தெரிவித்துள்ள சர்வதேச அமைப்புகள், அரசியல்நோக்கங்களுடன் இந்த ஆணைக்குழு பயன்படுத்தப்படலாம் என்பது குறித்தும் அச்சம் வெளியிட்டுள்ளன. பயனாளர்களின் அடையாளங்களை கோருதல் கடும் கண்காணிப்பு நடவடிக்கைகளால் அந்தரங்கங்கள் மற்றும் பாதுகாப்பிற்கு ஆபத்து ஏற்படலாம். இணையவழி மூலம் கருத்தினை முன்வைப்பதை தடுப்பது டிஜிட்டல் பொருளாதாரத்திற்கும் வேலைவாய்ப்புகளிற்கும் பாதிப்பை ஏற்படுத்தலாம் எனவும் சர்வதேச அமைப்புகள் தெரிவித்துள்ளன. (ம-7)

## தமிழ...

ஏகமனதாக தேர்ந்தெடுக்கும் வகையில் போட்டியிடும் மூன்று வேட்பாளர்களும் கலந்துரையாடுவதற்கு கால அவ காசம் வழங்கப்பட்ட போதிலும் அம்முறைமை சாத்தியப்படாமையினால் தேர்தல் ஒன்றின் மூலமே தலைமை தேர்ந்தெடுக்கப்படும் நிலைமை தற்போது உருவாகியுள்ளது.

இதனையடுத்து இன்று 21ஆம் திகதி திருகோணமலையில் வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளதுடன், இன்றைய தினமே வெற்றி பெற்ற வேட்பாளர் அறிவிக்கப்படுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## ஜனா...

மைப்புச் சட்ட நிலைமைக்கு அமைய எதிர்வரும் செப்ரெம்பர் மற்றும் ஒக்ரோபர் மாதங்களுக்கு இடையில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என கூறப்படுகிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பதவிக் காலம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முடிவடைகின்றது. இதன் பின்னர் அரசியலமைப்புச் சட்டத்திற்கு அமைய ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும். (ம-7)

## குடும்பஸ்தர் பலி

பொலநறுவை - மெதிரிகிரிய பிரதேசத்தில் காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று காலை இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் மூன்று பிள்ளைகளின் தந்தையான 48 வயதுடைய மகிந்த ஜெயசிங்க என்ற நபரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

## கட்சித் தாவல்...

பாராளுமன்றத்தில் பதவி மாற்றத்துக்காக தற்போது பேரம் பேசும் செயற்பாடுகள் ஆரம்பமாகியுள்ளது.

இதன்படி ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்காகவும், பொதுத் தேர்தலில் அதிகாரத்தை கைப்பற்றவும் இந்த பேரம் பேசும் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

இதற்காக கோடிக்கணக்கான ரூபாய் பணம் முன்மொழியப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் சுமார் இருபது பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சி மாறுவதற்கு தயாராக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378, 076 097 3127

லக்கி 7 VIP
திகதி 2024.01.20
சீட்டிழுப்பு இலக்கம் 0191
U 8 7 5 8 5 2 U

தன நிதானய
திகதி - 2024.01.20
சீட்டிழுப்பு இலக்கம் - 1395
F 12 38 47 51 F
33807

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3607
சீட்டிழுப்பு திகதி 20.01.2024
S 05 29 55 70
S 11812

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.01.20
சீட்டிழுப்பு இலக்கம் 0674
மேஷம் 09 12 42 59 மேஷம்
18357 09

மஹஜன சம்பத
திகதி 2024/01/20
சீட்டிழுப்பு இலக்கம் 5365
K 7 9 4 4 3 0

மெகா பவர்
திகதி 20/01/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1713
I 21 18 28 35 49
64661

உத்தியோகபூர்வ முடிவுகள்
20.01.2024 வெற்றி வாரம் 073 வர்ணம் நீலம்
J 2 4 6 6 8 7
97833
26,855,123.20
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2339 வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.01.20 தினம் சனிக்கிழமை
07 23 50 67 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 68,111,617.60
84841

சனிதா
திகதி 2024.01.20 வெற்றி வாரம் 4500
23 26 67 74 Y
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 70,689,306.80
29065

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4051 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.01.20 தினம் சனிக்கிழமை
02 05 44 49 துலாம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,628,351.60
615086

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
G 26 35 40 46 60
1515 சிவப்பு 20.01.2024 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 495,259,706.20

அத கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம்: 2165
சீட்டிழுப்பு திகதி: 2024.01.20
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 85,102,495.20
20 38 52 70 T
732241

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனடாவில் உயர்கல்வி

குறைந்த கட்டணத்தில்
இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி

**STUDY IN UK & WORK VISA**

ஆங்கில பயிற்சியுடன் கூடிய வெளிநாட்டு
உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு
நேரடியாக வருகைதந்து இலவச ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள
வெற்றிகரமான 13 வருட சேவையில்

**WEC COLLEGE**
புதிய உயர்கல்லூரி வளாகம்
ஆரியகுளம்,யாழ்ப்பாணம்
Whatsapp: 0094779265447
0212050988,0217200989
கிளை: சங்கத்தானை,சாவகச்சேரி
(18672)


## இராஜகோபுரத்துக்கு அடிக்கல் நாட்டல்

(கொக்குவில்)

கொக்குவில் மேற்கு அருள்மிகு மஞ்சவனப்பதி முருகன் ஆலய சண்முகர் வாசலுக்கான பஞ்சதள இராஜகோபுர அடிக்கல் நாட்டு விழாவானது நாளை திங்கட்கிழமை (22) அமிர்த சித்தயோகமும் மிருகசீரிட நட்சத்திரமும் மீன இலக்கிணமும் கூடிய காலை 9.56 முதல் 11.02 மணி வரையுள்ள சுபமூகூர்த்த வேளையில் பக்தி பூர்வமாக இடம் பெறவுள்ளது. (ம-7)


## பாராட்டி வாழ்த்துகின்றேன்



21.01.2024 இன்று நல்லூர் இளங்கலைஞர்
மண்டபத்தில் நடைபெற இருக்கும்
**பிரம்ம ஸ்ரீ வரதராசசர்மா ரமணசர்மா**
அவர்களின் மாணவனும் மகனும் ஆகிய
**சிரஞ்சீவி ர.லயசர்மா**
அவர்களின் மிருதங்க
அரங்கேற்றம் சிறப்பாக நடைபெற
பாராட்டி வாழ்த்துகின்றேன்.

**இணுவையூர் V.K. குகானந்தன்**
**தலைவர்**
**ரசிகப்பிரியா சபா கலை வளர்ச்சி மையம்**
**இணுவில்**
(C-8175)

## காணி, வீடு விற்பனைக்கு

- யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் நீராவியடி பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் மாடிவீடு உடனடியாக விற்பனைக்கு உண்டு.
- உரும்பிராய் சந்தியில் இருந்து இராசபாதைக்கு செல்லும் வீதியில் எழு பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.
- யாழ்ப்பாண நகரத்தின் மத்தியில் 3 பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு.
- மன்னார் நகரில் அபான்ஸ் நிறுவனத்துக்கு அருகில் 14 பேர்ச் காணி விற்பனைக்கு உண்டு.

**தரகர் தேவையில்லை வாங்குபவர்கள் மாத்திரம் தொடர்பு கொள்ளவும்.**
வீடு, காணி, வியாபார நிலையங்களை நீங்கள்
விற்பதற்கும் வாங்குவதற்கும் நம்பிக்கையுடன் நாடுங்கள்

**Easy Real Estate**
**076 742 4301, 075 742 1612**
**Whatsapp : 075 710 9639**
**மன்னாரில் வீடுகள், காணிகள் தேவை.**
(18703)

## சிங்களம் (அரச, தனியார், பாடசாலை)

கடந்த வருடம் அரசாங்கம், தனியார் துறைகளில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான பரீட்சைக்கு வழிகாட்டல் மற்றும் எழுத பேச வகுப்புக்கள் நடைபெற்றன. அதேபோன்று இவ் வருடமும் 2024 ஆண்டுக்கான வகுப்புக்கள் ஆரம்பிக்க உள்ளோம். உடன் தொடர்பு கொள்ளவும்.

♦ தனியாக
♦ குழுவாக
தொடர்பு **077 335 4530**
(18696)

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH 30% *Special offer for all the courses*

- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam, IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்
OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.
**T.P : 077 780 3970, 074 007 1970**
(18230)

## SB TRAVELS AND TOURS PVT LTD.

No.198, Kasthuriyar Road, Jaffna.

விசாக்கள் | ரிக்கெட்டுக்கள்

**Malaysia, Dubai, Thailand, China, Vietnam, India E-Visa**

நாடுகளுக்கான விசாக்களும் மற்றும் சகல நாடுகளுக்குமான விமான ரிக்கெட்டுக்களை மிக குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**Hotline : 075 555 9932**
**Tel : 021 222 8555**
**Jaffna : 076 691 1082, 83, 89**
**Colombo : 077 108 3482, 83**
Email : sbtravelsjaffna@gmail.com
(C-8171)

## பெண் வேலையாள் தேவை

யாழ். நகரில் உள்ள கடை ஒன்றிற்கு
18 - 30 வயதிற்குட்பட்ட
பெண் வேலையாள் தேவை.
**077 937 0000**
**075 498 5400**
**075 988 1000**
(18698)

## வீடு வாடகைக்கு

இல.120, 3 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம் என்னும்
முகவரியில் அமைந்துள்ள
மாடி வீடு (இருதளமும்)
வாடகைக்கு உண்டு.
**077 605 5555**

## CANADA VISITOR VISA

VISITOR VISA வில் கனடா
செல்வதற்குரிய ஆலோசனைகள்
மற்றும் Online விண்ணப்பங்கள்
விரைவாக செய்து தரப்படும்
**CIMS COLLEGE** (C-8176)
**0777-068-777**
49A.சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
**V2 TRAVELS**
(C-8176)

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
**சம்பளம் - 30'000/-**
பயிற்சியின்போது - 25'000/-
**0777-068-777**
v2vacancies@gmail.com

## IELTS - New Batch ஆரம்பம்

இத்துடன் Basic & Advance Grammar Classes
**இல.53, சிவகுருநாதர் வீதி, Brown Rd, Jaffna.**
**077 798 9830** By:-B.MURALI
வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.
(18663)

## வெல்டிங் வேலையாள் தேவை

யாழ் நகரில் உள்ள கடை ஒன்றிற்கு
அனுபவம் வாய்ந்த வெல்டிங்
வேலையர்ள்த் தேவை. சம்பளம் நாள்
ஒன்றிற்கு 3000/= மதிய உணவுடன்
தொடர்புகளுக்கு :
**077 937 0000**
**075 988 1000**
(18698)

## விற்பனைக்கு

அராலி செட்டியார் மடம்
வட்டுக்கோட்டையில் மெயின்
றோட்டில் இருந்து இரண்டாவது
காணி நல்லநிலையில்
உள்ள வீடு காணி 1 1/4 பரப்பில்
உள்ளது. (விலை 700,0000/=)
**076 768 7641**
(18695)

## Zoom மூலமான வகுப்பு வரலாறு

**SB.sanu**
(பிரபல பாடசாலை ஆசிரியர்)
**(தரம் 06 - A/L வரை)**
- தரம் 10,11 paper Class
- A/L புதிய பிரிவுகள் (2024,2025 A/L)

**90 புள்ளிக்கு மேல் உத்தரவாதம்**
தொடர்புகளுக்கு : **077 83 43 666**
(18620)

## Happy Supermarket - உரும்பிராய்

உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின்
கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 270 /= | Max 3Kg |
| 1 Kg றவை | - 285 /= | |
| 1 Kg கோதுமை மா | - 183 /= | |
| 1 Kg Prima கோதுமை | - 188 /= | |
| 1 Kg அரிசி மா | - 196 /= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 293 /= | Max 3Kg |
| 1 Kg தீட்டல் பச்சை | - 164 /= | |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 425 /= | |
| 01 Lux Soap | - 165 /= | ~~175 /=~~ |
| 01 Sunlinght Soap | - 140 /= | ~~150 /=~~ |
| 450g நெஸ்டமோல்ட் | - 780 /= | ~~830 /=~~ |
| 400g sustagen சஸ்ரயன் | - 3435 /= | ~~3900 /=~~ |
| 01 Supiri ரின்மீன் | - 480 /= | ~~850 /=~~ |
| 1Kg சோயா | - 499 /= | |
| 180ml Sunsilk Shampoo | - 440 /= | ~~480 /=~~ |

1040/=



~~1080/-~~
Max - 02

யோக்கட் மொத்த கொள்வனவுகளிற்கு எம்மை நாடுங்கள்
தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.
பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.
**Happy Supermarket**
0777 8080 30.
(18706)

## விமலம் திருமண சேவை

தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ற
மணமகன், மணமகள் தேவையெனில்
எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.
உள்நாட்டு/ வெளிநாட்டு மணமகன்,
மணமகள் தாராளமாக உள்ளன.
**+14372446737**
**கனடா +16476571347**
**077 240 9276**
(18521)

## வேலையாட்கள் தேவை

மீசாலையில் இயங்கும் SVIS
Distributors(pvt)Ltd
கணக்கீடு உதவியாளர்
ஆண், பெண் இருபாலாரும்
**077 211 0996**
**077 245 4224**
(18699)

## வேலைவாய்ப்பு

154, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரியில் இயங்கும்
சுப்பசூஸ் நிறுவனத்திற்கு விநியோக
உதவியாளர் (Delivery Boy) தேவை.
விண்ணப்பிக்க விரும்பியவர்கள்
மேற்காணும் முகவரிக்கு சுயவிபரக்
கோவையை அனுப்பி வைக்கவும்.
(18700)

## பெண் ஊழியர்கள் தேவை

யாழ்ப்பாணம், இருபாலை
கிளைகளில் இயங்கிவரும் போட்டோ
கொப்பி, புத்தக கடைகளுக்கு
அனுபவமுள்ள/ அனுபவமற்ற பெண்
ஊழியர்கள் தேவை!!!
தகுந்த சம்பளம் வழங்கப்படும்
**076 832 3682**
(18694)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்றெட் ஸ்தாபனத்தினால் இல. 191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.01.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.